உ

கடவுள் துணை

புலிப்பாணி மகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# சோதிடம் முந்நூறு

இஃது

திரிசிரபுரம்-ஜோதிடர்

**இரங்கசாமி பிள்ளையவர்களால்**

ஏட்டுப் பிரதிகளைக்கொண்டு பரிசோதிக்கப்பட்டு,

திரிசிரபுரம்-தா. பொன்னுசாமிப் பிள்ளையவர்களால்

பதிப்பிக்கப்பெற்ற பிரதிக்கிணங்க

**புதுக்கியும், விளக்கியும், திருத்தியும்**

**செப்பஞ் செய்யப்பெற்று,**

சென்னை:

**B. R. தேவராஜ நாயகர் அவர்களால்**

வெளியிடப்பெற்றது.

பதிப்புரிமை] [விலை ரூ. 4-00

**புலிப்பாணி மகாமுனிவர்**

திருவாய்மலர்ந்தருளிய

# சோதிடம் முந்நூறு

## காப்பு

ஆதியெனும்பராபரத்தின் கிருபைகாப்பு
அன்பானமனோன்மணியாள் பாதங்காப்பு
சோதியெனும்பஞ்சகர்த்தாள் பாதங்காப்பு
சொற்பெரியகரிமுகனுங் கந்தன்காப்பு
நீதியெனுமூலகுரு முதலாயுள்ள
நிகழ்ச்சித்தர்போகருட பாதங்காப்பு
வாதியெனும்பெரியோர்கள் பதங்காப்பாக
வழுத்துகிறேன்ஜோசியத்தின் வண்மைகேளே. 1

சத்தியேதயாபரியே ஞானரூபி
சாம்பவியேமனோன்மணியே கபாலிசூலி
முத்தியேவேதாந்த யரையேஅம்மா
முக்குணமேமுச்சுடரே மாயாவீரி
வெற்றியேமூவர்களுக் கருளாய்நின்ற
வேணிகையேசாமளையே பொன்னேமின்னே.
சித்திடையேசோதிடமும் முன்னூரையா
சின்மயத்தின்கணேசனுட காப்பாம்பாரே. 2

## நட்பு ஆட்சி உச்சம் பகை நீசம்

## சூரியன்

நானென்றசூரியனுக் காட்சிசிங்கந்
தன்மையுள்ளமேஷமது உச்சமாகும்
தானென்றதுலாமதுவும் நீசமாகும்
தனியுாண தனுசுடனே மீனம்நட்பாம்

மானென்றமற்றேழு ராசிதானும்
வரும்பகையாமென்றுனக்கு சாற்றினேம்யாம்
கோனென்றபோகருட கடாக்ஷத்தாலே
குணமானபுலிப்பாணி குறித்திட்டேனே. 3

## சந்திரன்

பாரப்பாசந்திரனுக் காட்சிநண்டு
பாங்கானவிடையதுவே உச்சமாகும்
வீரப்பாவிருச்சிகமும் நீசமாகும்
விருதுபெற்றதனுமீனம் கன்னிநட்பு
ஆரப்பா அறிவார்கள் மற்றுறுராசி
அருளில்லாப்பகையதுவே யாகும்பாரு
கூறப்பாகிரகம்நின்ற நிலையைப்பார்த்து
குறிப்பறிந்தபுலிப்பாணி கூறினேனே. 4

## செவ்வாய்

கேளப்பாசெவ்வாய்க்கு மேஷம்தேளும்
கெணிதமுடனுட்சியது வாகும்பாரு
நாளப்பாமகரமது உச்சமாகும்
நலமில்லாநீசமது கடகமாகும்
நாளப்பாதனுமீனம் ரிஷபம்கும்பம்
தயங்குகின்றகோதையுடன் மிதுனம்நட்பாம்
பாளப்பாகோல்சிங்கம் பகையாமென்று
பண்புடனேபோகரெனக் குரைத்தார்தானே. 5

## புதன்

தானென்றபுதனுக்கு மிதுனமாட்சி
தன்மையுள்ளகன்னியது மாட்சிஉச்சம்
மானென்றமீனமது நீசமாகும்
மனதறிவாய்கடகமரி பகையாமென்று
வானென்றமற்றேழு ராசிதானும்
வகையானநட்பென்று வாழ்த்தினேம்யாம்
நானென்றபோகருட கடாக்ஷத்தாலே
நவக்கிரகநிலையறிவாய் நன்மைதானே. 6



## வியாழன்

ஓமென்றவியாழனுக்கு ஆட்சிகேளு
உண்மையுடன்தனுமீன மிரண்டேயாகும்
நாமென்றகற்கடகம் உச்சமாகும்
கனமில்லாமகரமது நீச்சவீடாம்
போமென்றவிருச்சிகமும் பகையதாகும்
புகழ்பெற்றமற்றுறு ராசிநட்பாம்
நாமென்றபோகருட கடாக்ஷத்தாலே
நயமாகபுலிப்பாணி நவின்றிட்டேனே. 7

## சுக்கிரன்

கேளப்பாசுக்கிரனுக் கெருதுகோலும்
கெணிதமுடனுட்சியது உச்சம்மீனம்
வாளப்பாகோதையவள் நீச்சமாவள்
வகையில்லாசிங்கமுடன் விருச்சிகந்தான்
ஆளப்பாபகையதுவே யாகும்ஆறும்
அளவில்லாநட்பென்றே யறைந்தவாறு
மாளப்பாபோகருட கடாக்ஷத்தாலே
மார்க்கமுடன்புலிப்பாணி யறிவித்தேனே. 8

## சனி

தேனென்றசனிதனக்கு மகரம்கும்பம்
தெவிட்டாதஆட்சியது உச்சம்கோளாம்
மானென்றமேஷமது நீசம்மற்ற
மற்கடகசிம்மமொடு விருச்சிகந்தான்
ஊனென்றவீண்பகையாம் மற்றோராறும்
உள்ளபடிநட்பாகு முடவனுக்கே
கோனென்றகுருவருளாம் கடாக்ஷத்தாலே
கொற்றவனேபுலிப்பாணி கூறினேனே. 9

## ராகு-கேது

பாரப்பாராகுடனே கேதுவுக்கும்
பாங்கானவீடதுவே கும்பமாட்சி
வீரப்பாவிருச்சிகமும் கடகம்உச்சம்
வீருடையரிஷபமது நீச்சம்சிம்மம்

காரப்பாபகையாகும்'மற்றேழ்நட்பாம்
காண்பதுவும்மூன்றுபதி'னென்றும்சொல்லார்
ஆரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
அப்பனே புலிப்பாணி அறிவித்தேனே. 10

## துவாதச லக்கினப்பெயர்

சீர்மலிமுதற்பாகத்தின் பலன்ருன் சிந்திதங்கிலேசமெய்சொரூபம்
பேர்மலிவயதும்பிரபலபுத்திரனும் பெருநிதிகீர்த்திமூர்த்திகளும்
ஏர்மலிசுபசந்தோஷஞானமும் மிலக்கணமுபாங்கமேமுதலாம்
தார்மலிபோகர்தாளினைவணங்கிச் சாற்றினேன்புலிப்பாணி
[தானே.

## 2-மிடம்

தானமிகுரெண்டிடத்தின் பெயரைக்கேளு
தனம்குடும்பம்மொளிசெரிநேத் திரமும்வித்தை
ஈனமிலாச்செல்வமுடன் சாஸ்திரவாக்கு
இரும்பொன்னும்முபதேச மியம்புகேழ்வி
மானமிகுசவுபாக்கியங் கமனம்புத்தி
மற்றுமுளநவரெத்தின வகையின்பேதம்
ஊனமிலாமிவைபார்த்து முணர்த்துமென்று
உரைத்திட்டேன்புலிப்பாணி உறுதியாமே. 12

## 3-மிடம்

ஆனமூன்ரு மிடத்தினரும்பலன்
மானவீரியம் மற்றுயர்சேர்க்கையும்
தானயோகந் தயிரியஞ்சோதரர்
ஈனவேலை இருங்கலன்வீரமே. 13

## 4-5-மிடம்

வித்தைவாகனம் வீடுசுபஞ்சுபம்
மெத்தையன்னை மிகுசுகநான்கதாம்
பத்தின்பாதி பழையசீமான்மந்திரம்
வித்தைபுத்தி புத்திரர்செல்வமே. 14



## 6-மிடம்

ஆருமிடத்தினது பலன்ருனப்பா
ஆயுதத்தால் ரணஞ்சொல்லு ஞாதிதுன்பம்
வீரானயுத்தமொடு திரவியநஷ்டம்
மிகுதிருடர்ஜலமடந்தை வினையுஞ்சேர்வும்
கூரானமெய்வாதை பெண்ணால் கண்டம்
கூடுமேபெரும்பாலும் நோயுமென்று
பேரானசிறைச்சாலை கிட்டுமென்று
பேசினேன்புலிப்பாணி பிரியத்தோடே. 15

## 7-மிடம்

சப்தமத்தின்பலன்கேளு மணமதாகும்
தகுமடந்தைபுதல்வர்க்குச் சாற்றுமின்பம்
சித்தமுளவிபகார மனஞ்சுற்றத்தார்
அபிமானமரசரது சேர்சன்மானம்
தத்துகயல்விழிமாது சேர்க்கைநன்ருய்
சதிருடனேதான்வந்து சேருமென்று
கொத்தாகநீயறிந்து கூறுவாயேல்
குறிதப்பாபலன்வந்து கூடுமென்றே. 16

## 8-மிடம்

அஷ்டமயோக மரும்பிணிசண்டையும்
நஷ்டங்கிலேசம் பகைநன்மரணமும்
துஷ்டடம்பமும் துன்றுமலையேறி
கஷ்டப்பட்டு கலங்கிவிழுதலே. 17

## 9-மிடம்

ஒன்பதாம்பல னுகுமுபதேச
மின்பகூப மிகும்பணிகூபமும்
வன்பதான பரியும்வளப்பமும்
தன்மதானந் தனங்களுஞ்சாற்றுவர். 18

## 10-மிடம்

பத்தாகுமிடத்தினது பலனைக்கேளு
பட்டணங்கள்தாபித்தல் பவங்களோடு
வித்தானபலபுண்ணியந்'தேசாபிமானம்
வீரான அரசனெடு,கருமம்ஞானம்

சித்தமதிலிரக்கமிகு தெய்வபக்தி
சேருகின்றசவுரியமுங் கர்ப்பமூணும்
நத்துகின்றபூசையொடு மனைவிசேர்க்கை
நலமாகவிப்பலனை நவிலுவாயே. 19

## 11-மிடம்

பத்தின்மேலொன்ருகும் பலனைநன்ருய்
பகருகிறேன்பயிர்வளப்பம் பரிநல்வேழம்
வித்தைமிகுலாபநல் லதிவுசேர்க்கை
மிகுமனதிற்றுக்கமொடு சிவிகைசேரும்
உத்தரியஞ்செறிந்தபசும் பொன்னையொத்த
உயர்மனைவியோகமது முதலாயுள்ள
மெத்தவேநீயறிந்து விளம்புவாயேல்
வேதமாயுன்வார்த்தை விரும்புவாரே. 20

## 12-மிடம்

பத்தின்மேல்இரண்டாம் பெயரைக்கேளு
பரதேசவுத்தியோகம் பணத்தின்சோர்வு
சத்தானபலபோகி சயனம்தியாகம்
தர்மமொடுகர்மபலன் சவுக்கியமாக
வித்தானபலபுண்ணிய விவாதமோடு
விளைந்திடுமேதொழிலான பலதானங்கள்
கத்தாதேபோகருட கருணையாலே
கரைந்திட்டோன்புலிப்பாணி கருத்தைத்தானே. 21

## வேறு

சோதியென்றகுருபதியும் வெள்ளிநீலன்
சொலிக்கின்றகதிர்மதிசேய் கணக்கன்பாம்பு
ஆதியென்றராசிபனி ரெண்டுக்குள்ளே
அடக்கிவைத்தோர்கோள்களையும் ஆயன்தானும்
வாதியென்றஞானியுமே பலவாருக
வையகத்தில்பூட்டிவைத்தார் வரிசையாக
சாதகமாய்சென்மனுக்கு சுட்டிக்காட்டி
சமர்த்தாகப்பலன்சொல்லும் குறியைக்கேளே. 22

---



# நூல்

## மேஷ லக்கின பலன்

கேளப்பாமேஷத்தில் ஜெனித்தபேர்க்கு
கெடுதிமெத்தசெய்வனடா கதிரோன்பின்கேள்
ஆளப்பா அகம்பொருளும் நிலமும்ஈந்தால்
அவன்விதியுங்குறையுமடா அன்பாய்க்கேளு
கூளப்பாகோணத்தி லிருக்கநன்று
கொற்றவனேகேந்திரமும் கூடாதப்பா
தாளப்பா போகருட கடாக்ஷத்தாலே
தனவானாய்வாழ்ந்திருப்பன் திசையிற்சொல்லே 23

## ரிஷப மிதுன லக்கினபலன்

சொல்லப்பாஎருதோடு மிதுனத்தோர்க்கு
சுகமெத்தஉண்டென்று சொல்லுவார்கள்
செல்லப்பாஅந்தணரும் கேந்திரமேற
அவர்செய்யுங்கொடுமையிது மெத்தவுண்டு
தள்ளப்பாதரைபொருளும் தனமும்நாசம்
தார்வேந்தர்தோஷமுடன் அரிட்டம்செப்பு
குள்ளப்பாகுருமதியுங் கோணமேற
கொற்றவனேகுழவிக்கு நன்மைகூறே. 24

## கடகம்

கூறப்பாகடகத்தில் ஜெனித்தபேர்க்கு
கொடுமைபலன்தந்திடுவார் சுக்கிராச்சாரி
வாரப்பாவரம்பெற்ற இந்திரசித்து
வகைமடிப்பாய்மாண்டானே வெள்ளியாலே
சீரப்பாதிரிகோணம் கரந்துநிற்க
சிவாசிவாசெம்பொன்னும் ரதங்களுண்டு
கூறப்பாமற்றவிடம் கூடாதப்பா
கொற்றவனே நிலைசமயம் கூர்ந்துபாரே. 25

## சிம்மம்

பாரப்பாசிங்கத்தில் ஜெனித்தபேர்க்கு
புவுமனுமேதிரிகோண மேறிநிற்க
சீரப்பாசெம்பொன்னும் செல்வம்பூதி
சிவசிவாசிக்குமடா சென்மனுக்கு

வீரப்பாமற்றயிடந் தனிலேநிற்க
வெகுமோசம்வருகுமடா வினையால்துன்பம்
கூறப்பாபோகருட கடாக்ஷத்தாலே
கொற்றவனேபுலிப்பாணி குறித்திட்டேனே. 26

## கன்னி

குறித்திட்டேன்கன்னியிலே குதித்தபேர்க்கு
குற்றம்வந்துநேருமடா குருவினாலே
பரித்திட்டேன்பண்டுபொருள் நிலமும்சேதம்
பகருகின்றகுருபதியும் கோணமேற
சிரித்திட்டேன்சென்மனுக்கு வேட்டலுண்டு
செந்திருமால்தேவியுமே பதியில்வாழும்
குறித்ததொருமனைதனிலே தெய்வமுண்டு
குற்றமில்லைபுலிப்பாணி கூறினேனே. 27

## துலாம்

கூறினேன்கோலுட யில்லுமாகில்
கொற்றவனேகதிரவனும் கோணமேற
சீரினேன்சென்மனுக்கு யோகம்மெத்த
சிவா சிவாசிவபதவி கிட்டும்செப்பு
மாறினேன்மற்றவிடந் தன்னில்நிற்க
மார்த்தாண்டன்திசையுமது ஆகாதப்பா
தேறினேன்போகருட கடாக்ஷத்தாலே
திடமானபுலிப்பாணி தெரிவித்தேனே. 28

## விருச்சிகம்

தெரிவித்தேன்தேளினில்லம் சென்மந்தோன்ற
செழுமதியும்கோணத்தில் சேரநன்று
அறிவித்தேன் அகம்பொருளும் அடிமைசெம்பொன்
அப்பனேகிடைக்குமடா அவனில்வாழ்வன்
மரிவித்தேன்கேந்திரமும் கூடாதப்பா
மறையவனேகொடும்பலனை குறித்துசொல்லு
தெரிவித்தேன்போகருட கடாக்ஷத்தாலே
தேர்ந்துநீபுலிப்பாணி நூலைப்பாரே. 29



## தனுசு

பாரப்பாவில்லுதனில் உதித்தபேர்க்கு
பகருவேன்புந்தியுமே பகையுமாவர்
சீரப்பாசென்னல்விளை பூமிதோப்பும்
சிவசிவாசெம்பொன்னும் சேதமாகும்
நீரப்பாநெடுமாலும் கோணமேற
நீணிலத்தில்பேர்விளங்கும் நிதியுமுள்ளோன்
ஆரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
அப்பனேபுலிப்பாணி பாடினேனே. 30

## மகரம்

அறைந்திட்டேன்இன்னமொன்று அன்பாய்க்கேளு
அப்பனேமகரத்தில் உதித்தசேய்க்கு
திரந்திட்டேன்திரவியமும் மனையும்சேதம்
தேசமாளரசனுட பகையுண்டாகும்
குறைந்திட்டேன்கொடுஞ்சேயும் கோணமேற
கோவேறுகழுதைகளும் காவல்மெத்த
புரந்திட்டேன்போகருட கடாக்ஷத்தாலே
பதியறிந்துபுவியோர்க்குப் பாடினேனே. 31

## கும்பம்

பாடினேன் இன்னமொரு புதுமைகேளு
பாங்கானகும்பத்தி லுதித்தசேய்க்கு
ஆடினேன் அசுரர்குரு கோணமேற
அப்பனேஉப்பரிகை மேடையுண்டு
தேடினேன் திரவியமும் சென்னல்பூமி
திடமாகச்சேருமடா செல்வமுள்ளோன்
கூடினேன்கேந்திரமும் நட்புமேற
கொற்றவனேதுர்ப்பலனைக் கூறுவாயே. 32

## மீனம்

கூறேநீமீனத்தில் குழவிதோன்ற
கொற்றவனேமாலோடு வெள்ளியாகா
ஆரேநீஅகம்பொருளும் நிலமுஞ்சேரும்
அப்பனே அங்கத்தில் மச்சமுண்டு

பாரே நீகோணத்தி லிருந்தபேர்க்கு
பகருவாய்நற்பலனை யறிந்துநீதான்
ஏரே நீபோகருட கடாக்ஷத்தானே
எமலோகஞ்சேர்வனடா இயம்பினேனே. 33

## குளிகன் நிலைமை

காணப்பா இன்னமொரு செயலைக்கேளு
கனமுள்ளகுளியனுமே பதியில்நிற்க
ஆணப்பா அகம்பொருளும் நிலமுங்காடி
அப்பனே அயன்விதியும் தீர்க்கஞ்சொல்லு
கூணப்பாகுளியனுமே துதியில்நிற்க
கொற்றவனேகலகனடா நேத்திரரோகன்
தாணப்பாதனவிரயம் தோடம்சொல்லு
தரணிதனில்துஷ்டனென்று கூறுகூறே. 34

## இதுவுமது

கூறப்பாகுளிகனுமே மூன்றில்நிற்க
கொற்றவனேதுணைவனுடன் போரும்செய்வன்
வீரப்பாவிரகனடா வாய்ச்சமர்த்தன்
விளம்புகிறேன் நாலினுட விபரங்கேளு
பாரப்பாபதிகடந்து கிரியில்வாசம்
பாலனவன்சிலகாலம் வாழ்ந்திருந்து
கூறப்பாபோகருட கடாக்ஷத்தாலே
குற்றமில்லைபுலிப்பாணி கூறினேனே. 35

## இதுவுமது

கூறினேன்கிரிஜந்தில் முடவன்பிள்ளை
குணமாகவாழ்வனடா சேய்க்குதோஷம்
தேறினேன்வீரனடா சத்துருபங்கன்
திடமாகவாழ்வனடா தனமுமுள்ளோன்
ஆறினேன் அயன்விதியு மெத்தவுண்டு
அப்பனே அடுத்தோரை காக்கும்வீரன்
கூறினேன் குளியனுமே ஆறில்நிற்க
கொற்றவனே இப்பலனை கூறினேனே. 36

## இதுவுமது

குறித்திட்டேன்குளிகனுமோ ரேழில்நிற்கக்
கொற்றவனேகுடும்பிக்குக் கண்டம்சொல்லு



சிரித்திட்டேன்சென்மனுக்கு விவாதத்தாலே
சிவசிவாசெம்பொன்னும் நஷ்டமாகும்
அரித்திட்டேன் அட்டமத்தில் குளிகன் நிற்க
அப்பனேஅழும்பனடா ஜலத்தால்கண்டம்
முரித்திட்டேன்போகருட கடாக்ஷத்தாலே
முகரோகமுண்டென்று மூட்டுவாயே. 37

## இதுவுமது

மூட்டுவாய்குளிகனுமோ பாக்கியத்தில்
முகவசியன் அழும்பனடா பிதுர்துரோகி
கூட்டுவாய்குவலயத்தில் தனமுள்ளோன்
குற்றமில்லைகருமத்தின் குறியைக்கேளு
நீட்டுவாய்நீணிலத்தில் கருமிதுரோகன்
நிலையறிந்துநீயறிவாய் அய்யம்வாங்கி
தீட்டுவாய்தின்பனடா விரலைஉச்சம்
சிறப்பாகசெப்புவாய் திண்ணந்தானே. 38

## இதுவுமது

தானென்றபதினொன்றில் குளிகன் நிற்கத்
தரணிதனில்பேர்விளங்குந் தனமுமுள்ளோன்
ஏனென்றஅயன்விதியும் அறிந்துசெப்பு
என்மகனேவசியனடா ஜாலக்காரன்
வீனென்றவிரயனடா ரசவாதத்தால்
விளம்புகிறேன்வீடுமனை கொதுவைவைப்பன்
கோனென்றபோகருட கடாக்ஷத்தாலே
கொற்றவனே வியத்தில்நின்ற பலனைக்கூறே. 39

## சூரியன் நிலைமை

பாரப்பாமூன்றுறு பத்துஒன்று
பகருகின்றபன்னொன்றில் வெய்யோன்நிற்கில்
சீரப்பாசீலனுட மனையில்தானும்
சிவசிவாதெய்வங்கள் காத்திருக்கும்
வாரப்பாவாகனமும் ஞானம்புத்தி
வளமானபுத்திரர்கள் அரசர்நேசம்
கூறப்பாபுரிவனடா சத்துருபங்கன்
கொற்றவனேமூர்க்கனென்று கூறுகூறே. 40

### இதுவுமது

கூறேநீசுராறும் ரெண்டுரெண்டு
கொற்றவனேபாக்கியமும் ஏழோடஞ்சில்
ஆரேநீஆதித்த னிருந்தாரானல்
அப்பனேஅங்கத்தில் காந்தலுண்டு
சீரேநீசொற்பனமும் சிரங்குகண்ணோய்
சிவசிவாசிந்தித்த தெல்லாமாகும்
கூறேநீபோகருட கடாக்ஷத்தாலே
கொலையீனர்பகையுமது வருகுஞ்சொல்லே. 41

### சந்திரன் நிலைமை

கேளப்பாகலையினுட பெருமைசொல்வேன்
கனமுள்ளதனலாபம் கேந்திரகோணம்
ஆளப்பாஅகம்பொருளும் நிலமுங்காடி
அப்பனேகிட்டுமடா கறவையுள்ளோன்
சூளப்பாசுகமுண்டு ஜென்மனுக்கு
சுயதேசபரதேச அரசர்நேசம்
கூளப்பாகொடியோர்கள் சேர்ந்துநோக்க
கொற்றவனேகலைவலுவை கூர்ந்துசெப்பே. 42

### இதுவுமது

சூடப்பாசந்திரனர் மூன்றேழ்ஐந்து
சுத்தஇந்துபன்னொன்றில் தனித்திருக்க
மாடப்பாமந்திரங்கள் செய்வன்காணே
மகத்தானவாதமொடு வயித்தியம்செய்வன்
கூடப்பாகுடும்பமது விருத்தியாகும்
குவலயத்தில்எதிரிக்கு மார்பிலாணி
வீடப்பாபோகருட கடாக்ஷத்தாலே
விதமறிந்துபுவியோர்க்கு விளம்புவாயே. 43

### செவ்வாய் நிலைமை

கேளப்பாசெவ்வாயும் ஒன்றுபத்து
கனமுள்ளதனலாபம் ஆறில்குக்க
ஆளப்பாஅகம்பொருளும் நிலமும்செம்பொன்
அப்பனேகிட்டுமடா தொழிலுமுள்ளோன்



சூளப்பாசுகமுண்டு சென்மனுக்கு
சுயதேசபரதேச அரசர்நேசம்
கூளப்பாகுடித்தலைவன் சத்துருபங்கன்
கொற்றவனேவகையாகப் பகர்ந்துசொல்லே. 44

### இதுவுமது

சொல்லப்பாமூன்றெட்டு பன்னிரெண்டும்
சுகசப்தகேந்திரமும் பாக்கியமரெண்டில்
அல்லப்பாஅத்தலத்தில் ஆறில்குக்க
அப்பனேஅகம்பொருளும் நிலமும்நஷ்டம்
குள்ளப்பாகுடும்பமது சிதறிப்போகும்
கொற்றவனேகுருவுக்கு தோஷமுண்டாம்
வல்லப்பாபோகருட கடாக்ஷத்தாலே
வளமாகபுலிப்பாணி வசனித்தேனே. 45

### வியாழன் நிலைமை

பாரப்பாபரமகுரு நாலேழ்பத்து
பகருகின்றகோணமுடன் தனமும்லாபம்
சீரப்பாசென்மனுக்கு யோகம்செப்பு
செந்திருமால்தேவியுமே பதியில்வாழ்வள்
கூறப்பாகுடிநாதன் கண்ணுற்றாலும்
குவலயத்தில்வெகுபேரை ஆதரிப்பன்
ஆரப்பாஆறெட்டு பன்னிரெண்டு
அறைகின்றேனதின்பலனை அன்பாய்க்கேளே. 46

### இதுவுமது

கேளப்பாயெட்டுக்கு வேசிகள்ளன்
கெடுதியுள்ளமனைவிபகை நோயால்கண்டம்
ஆளப்பா அரசர்பகை பொருளும்சேதம்
அப்பனேஅவமானம் கொள்வன்டம்பன்
தாளப்பாஆறுக்கு தோஷமுண்டு
தார்வேந்தர்பகையுமுண்டு ரோகமுண்டு
கூளப்பாசுராறில் எங்கோனுச்சி
குற்றமில்லைசென்மனுக்கு யோகங்கூறே. 47

## சுக்கிரன் நிலைமை

கேளப்பா அசுரகுரு கேந்திரகோணம்
கெட்டவர்கள்கண்ணுற்று பார்த்திட்டாலும்
ஆளப்பா அசுரகுரு பலனளிப்பர்
அப்பனேஉப்பரிகை மேடையுண்டு
வாளப்பாவயிரங்கள் முத்துமாலே
வளமாகப்பொருந்திருக்கும் வளவிலேதான்
நீளப்பா நின்றதொரு இராசியாதி
நிலேயறிந்துபுவியோர்க்கு நிகழ்த்துவாயே. 48

## இதுவுமது

பாரப்பாபனிரெண்டு மூன்றெட்டில்
பலமுள்ளஅசுரகுரு அதனில்தோன்ற
வீரப்பாவிதிகுறைவு வெதர்நோய்வாதம்
விளங்குகின்றசெம்பொன்னும் மனேயும்நஷ்டம்
கூறப்பாகுழவிக்கு மகோதரமும்பாண்டு
கொற்றவனேகுன்மமொடு சயமும்சோகை
சீரப்பாசுராறில் சுங்கன் ஆட்சி
சிவசிவாசயனசுகம் யோகஞ்சொல்லே. 49

## சனி நிலைமை

கனமுள்ளநவமாறு லாபம்மூன்று
கதிர்மைந்தனதிலிருக்க விதியும்தீர்க்கம்
தனமுண்டுபிதுர்தோஷம் சத்துருபங்கம்
தரணிதனில்பேர்விளங்கும் அரசன்லாபம்
குணமுள்ளகருமத்தி லிருக்கநல்லன்
கொற்றவனேவாகனமும் தொழிலுமுள்ளோன்
பொணம்போலபோகாதே சபையில்கூறு
பூதலத்தில்யென்னூலேப் புகழுவாயே. 50

## இதுவுமது தோஷ நிவர்த்தி

பாரப்பாஇன்னமொன்று பகரக்கேளு
பானுமைந்தன்பன்னென்றி லமைந்தவர்றும்
சீரப்பாசிறந்தகுரு சப்தமத்தில்
சீறிவரும்கரும்பாம்பு நாலிலேற



ஆரப்பாஆரல்யிரு மூன்றதாகும்
அப்பனேஅருக்கனுந்தான் மூன்றில்போக
வீரப்பாவிலகுமடா தோஷம்தோஷம்
விதியுண்டுசென்மனுக்கு விளம்பக்கேளே. 51

## சரலக்கின பலன்

ஆடப்பாசரராசி செனித்தபேர்க்கு
சுகமில்லேலாபாதி பதியினலே
ஆடப்பாஅகம்பொருளும் நிலமும்சேதம்
அப்பனேஅரசரிட தோஷமுண்டாம்
தேடப்பாதிரவியமு மளித்தாரானல்
திடமானஅரிட்டமடா தேடமாட்டான்
விடப்பாகோணத்தி லிருக்கநன்று
விளம்பினேன்புலிப்பாணி வினையைப்பாரே. 52

## திரம்

பாரப்பாதிரராசி செனித்தபேர்க்கு
பாங்கானபாக்கியாதி பதயுமாகா
கூறப்பாகோணத்தில் மேவினலும்
கொற்றவனேபலனளிப்பன் அரசன்லாபம்
வீரப்பாமற்றயெடந் தனிலேநிற்க
வெகுபாமம்பலனில்லே வினையில்துன்பம்
சீரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
சிறப்பாகபுலிப்பாணி செப்பினேனே. 53

## உபயம்

செப்புவாய்உபயத்தில் செனித்தபேர்க்கு
சிறந்ததொருசப்தமனு மாகாதப்பா
ஒப்புவாய்உலகத்தில் அவதிமெத்த
ஊழ்வினையைத்தடுப்பாரு முலகிலுண்டோ
தப்புவாய்திடல்நாசம் தனமும்நாசம்
தார்வேந்தர்பகையுமுண்டு தேகதுன்பம்
இப்புவியில்போகருட கடாக்ஷத்தாலே
இடமறிந்துதிசையறிந்து யியம்புவாயே. 54

## கொடிமாலே மச்சம்

கூறப்பாகுருவோடு வெய்யோன்பாம்பு
கொற்றவனேகுருமனேயில் கூடிநிற்க

சீறப்பா சென்மனுக்கு தோஷமில்லை
செப்புகிறேன் கொடிமாலை விழுகா தப்பா
ஆரப்பா அங்கத்தில் மச்சமுண்டு
அப்பனே அரவோடு அனலன்சேர
கூறப்பா கொடிமாலை மச்சமுண்டு
கொற்றவனேகுழவிக்குக் கூறுவாயே. 55

## இதுவுமது

கேளப்பாகுடினுதன் ஆட்சிஉச்சம்
கெட்டவர்கள்கண்ணுற்று நோக்கினுலும்
சூளப்பாசுகமில்லை களவுபோகும்
சோற்றிதுணிக்கையேந்தி நிற்கச்செய்யும்
ஆளப்பா அகத்திலே துன்பங்காணும்
அப்பனே அரண்மனையார் பகையுண்டாகும்
கூளப்பாகூட்டுறவு பிரிந்துபோகும்
கொற்றவனேகொடுந்துன்பம் விளையும்பாரே. 56

## சகட யோகம்

சீரே நீகுருவுக்கு வியமாறெட்டில்
செழுமதியுமதிலிருக்க சகடயோகம்
ஆரே நீஅமடுபயம் பொருளும்நஷ்டம்
அப்பனேபேர்விளங்கும் நிதியுமுள்ளோன்
கூறேநீகுருவுக்கு கேந்திரகோணம்
குழவிக்குநிதிகல்வி மெத்தவுண்டு
பாரே நீபோகருட கடாக்ஷத்தாலே
பாடினேன்புலிப்பாணி பதமாய்தானே. 57

## அன்னிய பீசம்

பாரப்பாபனிரெண்டில் மதியும்நிற்கப்
பகருகின்றபவுமனுமே மதிக்குயெட்டில்
சீரப்பாசெவ்வாய்க்கு எட்டில்தீயர்
சிவசிவர்சென்மனுமோ அன்னியபீசம்
ஆரப்பா அயன்விதியை அரையலாமோ
அப்பனே அணலனெடு குளிகன்சேர்ந்து
கூறப்பாகுடியிருக்க அட்டமத்தில்
கொற்றவனே அவைபோலே கூறுவாயே. 58



## தாரையோகம்

பாரப்பாபால்மதிக்கு நான்கில் வெள்ளி
பாங்குள்ளவெள்ளிக்கு நான்கில்இந்து
ஈரப்பாஇல்லுக்கு இவர்கள்நான்கில்
இடிபோலேகுமுருமடா தாரையோகம்
சீரப்பாசென்மனுக்கு சிவிகைகாடி
சிறப்பானவாகனமும் நிலமும்செம்பொன்
கூறப்பாபோகருட கடாக்ஷத்தாலே
குடினுதன்பெலமறிந்து கூறுவாயே. 59

## இதுவுமது

பாரப்பாபதினைந்து நாளிலேயும்
பகருகின்றபால்மதியும் வெய்யோனைத்தான்
சீரப்பாசீரியே அரவந்தீண்டில்
செத்திடுவர்போர்முகத்தில் அனந்தம்மன்னர்
ஊரப்பாஊரெங்கும் பேதிஅம்மை
உத்தமனேகவுமாரி யாலேசீக்கு
பாரப்பாமன்னர்களு மடியாவிட்டால்
மகத்தான அன்னமது அரிதாய்போமே. 60

## தேவன் முனி

பாரப்பா இருமூன்றில் புந்திநிற்க
பகருகின்றபரமகுரு ஏழில்நிற்க
ஆரப்பா அசுரகுரு எட்டில்நிற்க
அப்பனேமீனத்தில் அருக்கன்பிள்ளை
வீரப்பாவில்வளவில் சேயும்நிற்க
விளங்குகின்றமற்றோர்கள் எங்கும் நிற்க
கூறப்பாகுமரனையுங் கண்டுங்காணர்
குவலயத்தில்தேவனென்று கூறினேனே. 61

## தேவதை வசியன்

ஆமென்றசெவ்வாயும் ராகுமாந்தி
அப்பனேரெண்டோனைக் கூடிநிற்கில்
போமென்றபூதலத்தில் பரமன்பூசை
புகழ்பெரியஅய்யனேடு ருத்திரன்ருத்திரி
ஓமென்றஇலங்காளி வீரபத்திரன்
ஓதிடுவன் ஆகாச மாடன்தானும்

நாமென்றபோகருட கடாக்ஷத்தாலே
தப்பாமல்செய்திடுவன் சென்மன்தானே. 62

## இதுவுமது

தாமென்றஅம்புலிக்கு நாலாமாதி
தயவாகலக்கினத்து நாலோன்தானும்
ஏனென்றஎவ்விடத்தில் கூடிட்டாலும்
இதமாகஅசுரகுரு இணங்கிநிற்க
தேனென்றதேவிபரா துர்க்கைபூஜை
திடமாகச்செய்திடுவன் வராகியோடு
கோனென்றகொடியோர்கள் எதிர்நில்லார்கள்
கொற்றவனேவசியனடா கூறுகூறே. 63

## இதுவுமது

கேளப்பாஊரைந்தில் முக்கோள்நிற்க
கெதியுள்ளசன்னியாசி யோகம்யோகம்
ஆளப்பாஅத்தலத்தில் இருகோள்நிற்கில்
அப்பனேதபசியடா யோகிஞானி
கூளப்பாஒருகோளும் குணமாய்நிற்கில்
குவலயத்தில்புனிதனடா ஞானியாகி
வீளப்பாவிண்ணுலகத் தேவரோடு
விதமாகவீற்றிருப்பன் ரிஷிகளோடே. 64

## ஸ்திரீகளால் பொருள் சேர்தல்

கூடினேன்கரும்பாம்பு செவ்வாய்நீலன்
கொற்றவனேஓரிடத்தில் கூடிநிற்க
தேடினேன்தையலிட பொருளுஞ்சேரும்
திடமானமனையுமது கட்டுவானும்
சூடினேன்சுகமுண்டு சென்மனுக்கு
சுருதிமொழிபிசகாது சிலகாலத்தில்
ஆடினேன்அழுதாலும் வினையும்போமோ
அப்பனேஅமடுகளுந் திடமாய்ச்சொல்லே. 65

## தேசாந்திரம் போகுதல்

பாரப்பாபரமகுரு சனியும்பாம்பும்
பலமாகசர உபய மமர்ந்துநிற்க
சீரப்பாசென்மனுமே ஊரைவிட்டு
சிவசிவாசிலகாலந் தேசஞ்செல்வன்



கூறப்பாகுடிநாதன் வலுத்திருக்க
கொற்றவனேகுமரனுந்தான் குடியில்வந்து
வீரப்பாவெகுகாலம் வாசஞ்செய்வன்
விளம்பினேன்புலிப்பாணி விளம்பக்கேளே. 66

## பரதேசம் போகுதல்

பாரப்பாஊராறோன் இருநான்கோனும்
பகருகின்றசெவ்வாயும் மூவர்சேர்ந்து
கூறப்பாயெவ்விடத்தில்கூடிட்டாலும்
கொற்றவனேபரதேசம் போவன்காணே
சீரேநீசுந்திரனும் கண்ணுற்றாலும்
சிலகாலந்தங்கிருந்து செம்பொன்தேடி
ஆறப்பா அவன்பதியில் வந்துவாழ்வன்
அப்பனேபுலிப்பாணி அறைந்திட்டானே. 67

## கைம்பெண் சேர

வீரப்பாயின்னமொரு புதுமைகேளு
விளம்புகிறேன்வீரியன் வீட்டில்தானும்
ஆரப்பாஅசுரர்குரு செவ்வாய்கூடில்
அப்பனேஅமங்கலையை அணைந்துவாழ்வன்
கூறப்பாகுமரனுக்கு வித்தைபுத்தி
குவலயத்தில்நிதியுண்டு சிப்பினூல்பார்ப்பன்
சீரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
சிறப்பாகப்புலிப்பாணி செப்பினேனே. 68

## மகாராஜ யோகம்

பாரப்பாபதிக்கேழு நாலேழெட்டில்
பாங்கானகோள்களது சேர்ந்துநிற்க
சீரப்பாசென்மனுந் தனித்துநில்லான்
செம்பொன்னும்கோடியுண்டு சிறப்பாய்வாழ்வன்
வீரப்பாவெகுபூமிக் கரசனாகி
வீரர்படை கரிமாவும் ரதங்களுள்ளோன்
கூறப்பாகுவலயத்தில் என்னூல்பாரு
குணமாகபுலிப்பாணி குறித்திட்டேனே. 69

## இதுவுமது

கொள்ளப்பாகோள்ஒன்று சரமாய்நான்கில்
கொற்றவனேயேகசக்கிர வர்த்தியாவன்

அள்ளப்பா ஆனைபரி சேனைகூட்டம்
அணியணியாயிருக்குமடா அனேகமாக
உள்ளப்பா உத்தமர்கள் அருளும்பெற்று
உலகிலுள்ள அரசரிடம் பகுதிவாங்கி
இல்லப்பா இவ்வுலகில் சேல்கண்ணாளை
இதமாகச்சுகித்திருப்பன் அநேகம்பேரே. 70

## இதுவுமது

கூடினேன்யின்னமொரு சேதிகேளு
சுபருடனே நாலுபேர் கூடிநிற்க
ஆடினேன் அதற்குநால் மற்றோரெல்லாம்
அப்பனே அவனிதனில் முழுதுவாழ்வன்
கூடினேன்கோவேறு கழுதைகோடி
கொற்றவனே துரகங்கள் கோடாகோடி
தேடினேன்தேர்வீரர் படையுமெத்த
திக்கெட்டுமாளுமன்னன் தெரிந்துகொள்ளே. 71

## இதுவுமது

ஆரப்பா அஞ்சுபே ரொன்றுகூடி
அப்பனேமற்றவர்கள் ஒற்றிராமல்
கூறப்பாகுன்றுகளில் தனித்திருக்க
கொற்றவனேகுவலயங்க ளெல்லாமாள்வன்
பாரப்பாபடைவீரர் ஜனங்கள்மெத்த
பறக்குமடாகொடித்திரையும் கடலுக்கப்பால்
சீரப்பாசெம்பொன்னும் விளையும்பூமி
சிக்குமடாபுலிப்பாணி செப்பினேனே. 72

## இதுவுமது

அறைந்திட்டேன் நாலுபேர் கூடிநிற்க
அப்பனேஅதற்குமற் றோர்கள் நிற்க
பறைந்திட்டேன்பாருலக மாளும்வல்லன்
பகருகின்றசேனைரதம் கணக்கோயில்லை
சிறந்திட்டேன்சிற்றரசர் மெத்தவுண்டு
செகத்திலேபேருள்ள ராஜனாகி
குறைந்திட்டேன்கொடுமன்னர் எதிர்த்தாரானால்
கூற்றுவனைப்போலிருப்பன் கூறினேனே. 73



## இதுவுமது

பாரப்பாமேடமுதல் கடகம்மற்றும்
பகருகின்றகிரகங்க ளிருவராக
ஆரப்பா அகங்கள்தனி லமர்ந்திருக்க
அப்பனேஐஸ்வரியம் மெத்தவுண்டு
தீரப்பாசெம்பொன்னும் ரகங்கள்மெத்த
சிறந்ததொருபடைவீரர் கரிமாவுண்டு
தூரப்பாதொலைபூமிக் கரசனாகி
தொல்புவியில்வாழ்ந்திருப்பன் சூழ்ந்துபாரே. 74

## இதுவுமது

பாடினேனின்னமொன்று பகரக்கேளு
படவரவுபரமகுரு சேர்ந்துநிற்க
கூடினேன்குளிர்ந்தமதி அருகில்நிற்கக்
கொற்றவனே குவலயமும் ஆளும்வல்லன்
தேடினேன்தேர்வீரர் கோடாகோடி
திடமுள்ளதுரகங்கள் ரதங்கள்மெத்த
நாடினேன்போகருட கடாக்ஷத்தாலே
நாடெல்லாமாளுமன்னன் நயந்துபாரே. 75

## இதுவுமது

கூறினேன்கலைமதியும் ஒன்றில்நிற்க
குருவெள்ளிதேர்பாகன் ஆறேழெட்டில்
மாறினேன்மற்றோர்கள் மூன்றுபத்து
மைந்தனேலாபத்தி லமரநன்று
சீறினேன்செம்பொன்னும் கோடியுண்டு
சிவசிவாசீர்பெருகும் செல்வமுள்ளோன்
தேறினேன்காலாள்கள் மெத்தவுண்டு
திடமாகப்புலிப்பாணி தெரிவித்தேனே. 76

## இதுவுமது

பாரப்பாபனிரெண்டில் வெள்ளிநிற்க
பாங்கானரெண்டதனில் குருவுமேற
கூறப்பாலக்னாதி கேந்திரகோணம்
கொற்றவனேபாக்கியாதி லாபத்தோடு

வீரப்பாவிவர்நோக்க மிகுபொன்சேரும்
விதமானமுப்பதிஞ யிரந்தானுகும்
சீரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
சிறப்பாகப்புலிப்பாணி செப்பினேனே 77

## இதுவுமது

பாரப்பாமகரமுதல் நண்டுக்குள்ளே
பகருகின்றபானுமைந்தன் அதிலேதோன்ற
சீரப்பாசெழுமதியும் கேந்திரமேற
சிவசிவாயென்னசொல்வேன் அரசன்சென்மம்
ஆரப்பாஅகிலங்க ளெல்லாமாரும்
அப்பனேஅரசனுட கொடியைப்பார்த்து
நாரப்பாநகைக்குதடா சீமான்சோலை
நன்ருகபுலிப்பாணி நவின்றிட்டேனே. 78

## இதுவுமது

ஆரப்பாகரும்பாம்பு ஆறிலேற
அப்பனேசெம்பாம்பு யீராறேற
சீரப்பாசிறந்தகுரு கேந்திரமேற
சிவசிவா அஷ்டலெட் சுமியாள்யோகம்
கூறப்பாகெணங்களுக்கு பலிகொடுத்து
கெணத்திலுள்ள திரவியமும் வெளுயெடுத்து
பாரப்பாபாக்கியங்கள் கண்ணுல்பார்ப்பன்
பண்பாகபுலிப்பாணி பகர்ந்தேன்பாரே. 79

## புதையல் தோன்ற

கூறப்பாகருமாதி நாலில்தோன்ற
கொற்றவனேகுடிநாதன் கோணம்ரெண்டில்
சீரப்பாசென்மனுக்கு புதையல்கிட்டும்
செகத்தில்நல்லபேர்விளங்கும் செய்யுள்வல்லோன்
ஆரப்பா அஸ்வங்கள் காடியுண்டு
அப்பனேஅன்னசத் திரமுங்கட்டி
வீரப்பாவெகுபேர்க்கு அமுதளிப்பன்
விதமானபுலிப்பாணி விளம்பினேனே. 80

## இதுவுமது

ஆமப்பாயின்னமொரு சேதிகேளு
அப்பனே தன நிதியன் கருமன்லாபன்



தாமப்பாதனம்குவியும் நால்வர்மாற
தரணிதனில்பேர்விளங்கோன் சிவிகையுள்ளோன்
வேமப்பாபகைவருடன் சேர்ந்துகெட்டால்
வீதிகளில்அமடுபிச்சை எடுப்பன்காணே
போமப்பாபோகருட கடாக்ஷத்தாலே
பூதலத்தில்புலிப்பாணி அறைந்திட்டேனே. 81

## மருந்தால் கண்டம்

சொல்லுகிறேன்இருநாலில் செவ்வாய்தோன்ற
சூரியனுரரவுடனே சேர்ந்துநிற்க
வில்லவேவிஷந்தீண்டி சாவான்சென்மம்
விதமானகளத்திரத்தால் வேதைமெத்த
நல்லவேலக்கினேச னுருமாதி
நஞ்சுள்ளகரும்பாம்பு சேர்ந்திட்டாலும்
புல்லவேமருந்தாலே கண்டம்சொல்லு
பூதலத்தில்புலிப்பாணி கழறிட்டேனே. 82

## அட்டமன் விதி

பாரப்பா அட்டமனு மெவரானுலும்
பலமுள்ளோர்அப்பலனே பணிந்துகேளு
சீரப்பாசிறைமரணம் கிரிமேலேறி
சிவசிவாவீழ்ந்திடுவன் தேசம்செல்வன்
கூறப்பாகொடும்பகையும் கொடுவாள்காயம்
குடிமன்னுஞ்சீவனமும் மோசக்கேடு
வீரப்பாவிஷபயமும் அம்மைபேதி
விளையுமடாபலதுன்பம் வினையைக்கேளே. 83

## இதுவுமது

கேளப்பாபீசத்தில் நோயுண்டாகும்
கெதியுள்ளகுழவிக்கு ரோகங்கிட்டும்
வீளப்பாதொங்கிடுவன் ளெகுபேர்காண
விளங்குகின்றதூக்குமரக் கோளில்தானும்
பாரப்பாபீரங்கி வெடியால்கேடு
பலதுன்பம்விளையுமடா பொருளும்நஷ்டம்
நீளப்பா நீர்பயமும் தீயால்வேதை
நீரிடியும்விழுகுமடா நிசஞ்சொன்னேமே. 84

## அட்டமன் நிலைமை

பாரப்பாஇன்னமொன்று பகரக்கேளு
பலமுள்ளஅட்டமனு மட்டமத்தில்
கூறப்பாகுழவிக்கு ஆண்டுநூறு
கொற்றவனேசத்துருவும் கூடினேக்க
ஆரப்பாஅயன்விதியும் அற்பமாகும்
அம்புலியும்உச்சகேந் திரத்தில்நிற்க
சீரப்பாஜென்மனுமே ஐம்பதுக்குள்
சிவலோகஞ்சேர்வனென்று தெளிந்துசெப்பே. 85

## இதுவுமது

அறைந்திட்டேன்யின்னமொன்று அன்பாய்க்கேளு
அட்டமத்தோன்மூன்றினிலே யமர்ந்தவாறும்
கரந்திட்டேன்கருவூரி லிருந்துவந்த
காளையவன் நூருண்டு வசிப்பனப்பா
பரைந்திட்டேன்பகைவர்களு மெதிர்த்தாரானல்
பாலனுமேபோர்புரிவன் நிதியுமுள்ளோன்
சிறந்திட்டேன்போகருட கடாக்ஷத்தாலே
சிறப்பாகபுலிப்பாணி சொன்னேன்பாரே. 86

பாரப்பாயின்னமொரு புதுமைகேளு
படவரவுசனிசெவ்வாய் வெய்யோனேழில்
வாரப்பாவந்ததொரு தாரமெல்லாம்
வையகத்தில்மாண்டிடுவர் வரிசையாக
ஆரப்பாஅட்டமத்தி லிவர்கள்குக்க
அப்பெண்ணின்கணவனுமோ முந்திசாவன்
சீரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
சிறப்பாகப்புலிப்பாணி நூலைப்பாரே. 87

சொல்லப்பாசுடர்வெள்ளி எட்டில்நிற்க
சுகமானகட்டில்மெத்தை மாடகூடம்
அல்லப்பாஅகம்பொருளும் நிலமுங்கிட்டும்
அரண்மனையில்சேவகமும் செய்வன்காளை
தள்ளப்பாதரைபொருளும் நிலமுமெல்லாம்
தந்தசுக்கிரன்வாங்கிடுவன் பின்னுல்கேடு
வல்லப்பாபோகருட கடாக்ஷத்தாலே
வளமானபுலிப்பாணி பாடினேனே. 88



ஆரடாயின்னமொரு சேதிகேளு
அட்டமத்தில்கருநாக மமைந்தவாறும்
சீரடாசெல்வனையும் அரவந்தீண்டி
செத்திறந்துபோய்மடிவன் செகத்திலேதான்
பாரடாபரமகுரு வேந்தன்நோக்க
படவரவுதீண்டாது பாலனைத்தான்
ஊரடாஉண்ணுதலால் கேடுமுண்டு
உத்தமனேஆரூனைக் கூர்ந்துசொல்லே. 89

பறந்திட்டேனின்னமொன்று பகரக்கேளு
பானுமந்தன்பால்மதிக்கு எட்டில்நிற்க
சிறந்திட்டேன்ஜென்மனுக்கு அநேகதுன்பம்
செத்திறந்துபோவதற்கு எண்ணங்கொள்வன்
அறைந்திட்டேன்அகம்பொருளும் நிலமும்நஷ்டம்
அப்பனேஅரசனிட தோஷமுண்டாம்
குறைந்திட்டேன்குடிநாதன் கேந்திரிக்க
குற்றமில்லைபுலிப்பாணி கூறக்கேளே. 90

நன்ருகப்பாம்புகள்தான் நாலிலேனும்
நலமாகஈராறும் இருநான்கிலேனும்
சென்றிட்டதீயர்பலர் செய்யாரப்பா
திரமானநாலில்நின்ருல் மாதர்தோஷம்
குன்றிவிடும்ஈராறில் பாதரோகம்
குணமானயிருநான்கில் கூறும்பாம்பால்
நன்ருகமிகுபயமா மற்றராசி
நலமென்றேபுலிப்பாணி நவின்றிட்டேனே. 91

கேளப்பாமலைதனத்தில் சப்தகோள்கள்
கெடிபெத்தமுடியரசு சீமானென்றேன்
ஆளப்பாசேனைபரி வேடர்கூட்டம்
அணியணியாயிருக்குமடா அலங்கஞ்சுத்தி
நாளப்பா நவமணியும் பொருந்திநிற்கும்
நலமானதுரகங்கள் ரதங்களுள்ளோன்
சூளப்பாபோகருட கடாக்ஷத்தாலே
சுகமாகப்புலிப்பாணி பகர்ந்தேன்பாரே. 92

ஆரப்பாஅஞ்சுக்கு அஞ்சாம்வீட்டில்
அப்பனேஅசுபர்களும் அமர்ந்துநிற்க

பாரப்பாபிதுருக்கு கண்டம்தெண்டம்
பலமாகசெப்புவாய் அரசர்தோஷம்
சீரப்பாசுபர்நிற்க செல்வமுண்டு
சிவசிவாபிதுருக்கு விதியும்தீர்க்கம்
கூறப்பாகுடிநாதன் கேந்திரகோணம்
கொற்றவனேபுலிப்பாணி குறித்திட்டேனே. 93

## பிதுருக்கு கண்டம்

பாரப்பாயின்னமொரு புதுமைகேளு
பகலவனுஞ்சனியோடு பாம்புசேர
கூறப்பாகுமரனவ னுதிக்குமுன்னே
கொற்றவனேபிதுருக்கு கண்டஞ்சொல்லு
ஆரப்பாஅத்தலத்தோன் சுபனைக்கூடி
அப்பனேகண்ணுற்று நோக்கினாலும்
சீரப்பாசிலகாலம் பிதுரிருந்து
சிவலோகமடைவனடா செயலைக்கூறே. 94

## பிதுருக்கு இருபக்கம் கோள்கள்

ஆச்சப்பாபத்தெட்டில் கோள்கள்நிற்க
அப்பனேஅவரவர்கள் பொசிப்புநாளில்
கூச்சப்பாகுழவியுட பிதுரைத்தேடி
கொற்றவனேசண்டனுமே வருவான்கூறு
மூச்சப்பாமேதினியில் செம்பொன்தேடி
முகமினுக்கிமாதருடன் கூடிவாழ்வன்
ஏச்சப்பாபோகருட கடாக்ஷத்தாலே
இடமறிந்துநிலைகூர்ந்து இயம்புவாயே. 95

## இதுவுமது

தானேதானின்னமொன்று செப்பக்கேளு
தயவாகதனபதியுந் தனத்திலேற
கோனேதான்குமரனுக்கு தனமிருந்தும்
குவலயத்திற்செட்டியடா காசுயீயான்
மானேதான்மக்கள்பெண்டீர் புஷ்டியாக
மடிரொம்பஉண்ணுமல் பதனஞ்செய்வான்
வீணேதான்போகருட கடாக்ஷத்தாலே
விதனமாகபுலிப்பாணி உரைக்கக்கேளே. 96



## நேத்திர ஊனம்

பாடுவாய்பதியோனும் ரெண்டோன்கூடில்
பகருகின்றஅசுரகுரு பலத்துநிற்க
கூடுவாய்குழவிக்கு நேத்திரஊனம்
கொற்றவனேமாந்தியுமே கூடிநிற்க
தேடுவாய்ஜென்மநல னுதிக்குமபோது
திடமாகச்செப்புவாய் நேத்திரமில்லை
ஆடுவாய்போகருட கடாக்ஷத்தாலே
அப்பனேபுலிப்பாணி அறிவித்தேனே. 97

## கிரகமாரி யோகம்

தானென்றகோள்களது மாறிநிற்க
தரணிதனில்பேர்விளங்குந் தனமுமுள்ளோன்
ஊனென்றஉடல்நாதன் பாம்புகூடில்
உத்தமனும்யோக்கியனும் புனிதன்சேயன்
கோனென்றகுமரியுட பூசைசெய்து
கொற்றவனேகுவலயத்தில் வாழ்ந்திருப்பன்
மானென்றமறலிபய மில்லையில்லை
மைந்தனேவிடமறிந்து வழுத்துவாயே. 98

## நாலோன் கருமன் சேர

கூடப்பாயின்னமொன்று செப்பக்கேளு
சுகமுள்ளநாலோனைக் கருமன்கூடில்
கூடப்பாகோவில்திருப் பணிகள்செய்வன்
கொற்றவனேவாகனமும் செம்பொன்கிட்டும்
வீடப்பாவெள்ளிக்கு அம்மன்துர்க்கா
விதமானபுந்திக்கு அய்யன்மாலோன்
பாடப்பாபவுமனுக்கு சுப்பிரமணியம்
பரமென்றசிவனுக்கு பொன்னக்கூறே. 99

## இதுவுமது

கூறப்பாகதிருக்கு கணேசன்சத்தி
கொற்றவனேஅம்புலிக்கு ருத்திரன்மாரி
ஆரப்பாவெகுபேர்க்கு அமுதளிப்பன்
அப்பனேஅன்னசத் திரமுங்கட்டி

பாரப்பாபகைவர்களும் கண்ணுற்றலும்
    பலன்குறைந்துபோகாது விதியும்தீர்க்கம்
கூறப்பாபோகருட கடாக்ஷத்தாலே
    கொற்றவனேபுலிப்பாணி குறித்திட்டேனே. 100

### சந்திரன் 1-6-8-ல் நின்ற பலன்

அறைந்திட்டேனின்னமொன்று அன்பாய்க்கேளு
    அம்புலியும்ஆறெட்டு லக்கினத்தில்
குறைந்திட்டேன்கொடியோர்கள் கூடிளுேக்க
    கூற்றுவனூர்வந்திடுவர் சிசுவைப்பற்றி
திறந்திட்டேன் திங்களொரு மூன்றுக்குள்ளே
    திடமானஅரிட்டமடா பத்துநாளில்
பறைந்திட்டேன்பாலனுக்கு விதியேஅற்பம்
    பண்பாகபுலிப்பாணி உரைத்தேன்பாரே. 101

### சூரியனுக்கு 5-9-மதி

பாரப்பாயின்னமொன்று பகரக்கேளு
    பகலவனுக்கலேமதியும்கோணமேற
சேரப்பாபலவிதத்தால் திரவியம்சேரும்
    செல்வனுக்குவேட்டலுண்டு கிரகமுண்டு
ஆரப்பாஅமடுபய மில்லேயில்லே
    அர்த்தராத்திரிதனிலே சப்தம்கேட்பன்
கூறப்பாகுமரனுக்கு எழுபத்தெட்டில்
    கூற்றுவனூர்வருங்குறியை குறிப்பாய்சொல்லே. 102

### 2-ல் செவ்வாய் நிற்க

பாடினேனின்னமொரு புதுமைகேளு
    பலமானசெவ்வாயும் துதியில்நிற்க
கூடினேன்கிரகத்தில் வழக்கும்போரும்
    குமரியவள்கணவனேயும் கருதிப்பாராள்
தேடினேன்தையலுமோ மாண்டாளானுல்
    தனம்விரயம்சஞ்சலமும் அழுதுமாய்வன்
ஆடினேன்ஆடவர்கள் அழுதகூலி
    அவல்கடலேஅவர்மடியில் போடுவாரே. 103



### 4-ல் பாவர் நிற்க

குறித்திட்டேனின்னமொன்று கூறக்கேளு
    குற்றமுள்ளோர் நான்கதனி லமைந்தவாறும்
அருத்திட்டேனத்தலத்தோன் கேந்திரிக்க
    அமடுவந்துதீருமடா அகமுமுள்ளோன்
சிரித்திட்டேன்ஜென்மனுக்கு வாகனங்களுண்டு
    சிறப்பாகமேதினியில் நலமாய்வாழ்வன்
பரித்திட்டேன்பெற்றவட்கு ரோகஞ்சொன்னேன்
    பரமகுருபதியமா யோகந்தானே. 104

### 4-ல் கேது நிற்க

கேளப்பாயின்னமொரு புதுமைகேளு
    கெடுதிசெய்யும்செம்பாம்பு நாலில்நிற்க
சீளப்பாஜெனித்தமனே சுத்தபாழாம்
    ஜென்மனுக்குகிரகமுண்டு விதியும்கூறு
கூளப்பாகுளிகனுமே சேர்ந்துநிற்க
    குடியிருக்ககுச்சில்லே கறவையில்லே
ஆளப்பாஅன்னேக்கு தோஷம்தோஷம்
    அத்திடலில்அரவுக்கு சாந்திசெய்யே. 105

### தர்மகர்மாதிபதி யோகம்

செய்யப்பாயின்னமொரு சேதிகேளு
    செயலாகநிதிகரும னிருவர்கூடி
கையப்பாகண்ணுற்று நோக்கினுலும்
    கனமுள்ளோரிருவருமே மாறினுலும்
அய்யப்பாஅகம்பொருளும் நிலமுஞ்செம்பொன்
    அப்பனேகிட்டுமடா ஜென்மனுக்கு
உய்யப்பாகருட கடாக்ஷத்தாலே
    உத்தமனேபுலிப்பாணி உரைத்தோம்நாமே. 106

### 3-6-க்குடையவர் சேர

அறைந்திட்டேனின்னமொரு சேதிகேளு
    அப்பனேஆறேனும் மூன்றேன்மேவ
திறந்திட்டேன்தேசத்துக் கள்ளர்நாட்டை
    தீயாலேகொளுத்திடுவன் சினமுமுள்ளோன்

உரைந்திட்டேன்உள்நாட்டு கள்ளர்கண்டால்
உள்ளபடி ஆக்கினையை விதிப்பன்காளே
பரைந்திட்டேன்படையாட்சி ஆள்கள்மெத்த
பண்பாகபுலிப்பாணி அறைந்திட்டேனே. 107

### 12-க்குடையவனும் குடும்பியும் 7-ல் நிற்க

வீரப்பாயின்னமொரு வினையைக்கேளு
விரையாதிகுடும்பியுமோ ரேழில்நிற்க
சீரப்பாஜென்மனும் வேடதாரி
சிவசிவாபாடகனும் செய்யுளுள்ளோன்
கூறப்பாகுமரியினல் லாபமுண்டு
கொற்றவனேசெப்படி வித்தைகளும்செய்வன்
கூரப்பாஅரவத்தை பிடித்துவந்து
ஆட்டிவைப்பன் அனைவோரும் பார்க்கத்தானே. 108

### மந்திரவாதி

பாரப்பாயின்னமொரு புதுமைகேளு
பால்மதிக்குநாலோனும் சுங்கன்கூடில்
கூறப்பாயெத்திடத்தில் கூடிட்டாலும்
கொற்றவனேஜென்மனுமோ மந்திரவாதி
வீரப்பாவராகிதுர்க்கை தேவிஅம்மன்
விதமானபூசைதனை மண்ணோர்போற்ற
சீரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
செப்பினேன்புலிப்பாணி செயலைத்தானே. 109

### சந்திரனும் 12-5-க் குடையவர்களும் சேர

செப்புவாய்சந்திரனும் ஈராறோனும்
சிவசிவாபஞ்சமத்தோன் மூவர்சேர்ந்து
அப்புவாய்ஆகாசங் கோபுரத்தில்
அப்பனேகம்பத்தை கட்டித்தானும்
ஒப்புவாய்உலகத்தோர் மதிமயங்க
ஓகோகோ ஆகாசகரணம்போட்டு
தப்புவாய்தரணிதனில் கீழேவந்து
தார்வேந்தர்மனமகிழ பணிவன்பாரே. 110

### ஆறுக்குடையவனும் லக்கினாதிபதியும்

பகருவாய்ஆறோனும் லெக்கனாதி
பன்னிரண்டெட்டாறில் தீயரோடே
இகருவாய்தேகமது ஜென்மனுக்கு
இளைத்துவிடும்ரோகங்கள் கிட்டும்கிட்டும்
புகழுகின்றஅரவோடு ரெண்டோன்கூடி
பூங்குழலேரெண்டதனி லமர்ந்துநிற்க
திகழுகின்றநீணிலத்தில் கல்வியாலே
நாலுவிதபிரசங்க வித்வானமே. 111

### சூரியனுக்கு முன்பின் புந்திநிற்க

தானென்றஇரவிக்கு முன்னேபுந்தி
தனித்திருக்கப்புனிதனடா தரித்திரதோஷம்
தானென்றஇரவிக்கு பின்னேபுந்தி
தரணிதனில்பேர்விளங்கும் தனமுமுள்ளோன்
தானென்றஇரவிக்கு பின்னேசேயும்
தங்கிடவேபுத்திரர்கள் மெத்தவுண்டாம்
தானென்றகுருவோடு நீலன்மேவ
தரணிதனில்செவிடனடா முடவன்பாரே. 112

### சூரியனுக்குப் பின் சனி

அறைந்திட்டேனின்னமொன்று செப்பக்கேளு
அனலனுக்குபின்னாலே அலரிமந்தன்
பரைந்திட்டேன்பண்டுபொருள் அகமுங்கிட்டும்
பார்தனிலேபரதார விசையனப்பா
குரைந்திட்டேன்குமரனுக்கு எட்டுபத்தில்
குலவையிட்டுவருவனடா சண்டன்தானும்
சிறந்திட்டேன்ஜென்மனுக்கு யோகஞ்செப்பு
சிறப்பாகப்புலிப்பாணி செப்பினேனே. 113

### 7-ல் மதி சுக்கிரன்

ஆரப்பாயின்னமொரு புதுமைகேளு
அம்புலியும்அசுரகுரு ஏழில்நிற்க
கூறப்பாகிழவனுக்கு மாலையிட்டு
குமரியவள்மதனத்தால் பலரைக்கூடி
சீரப்பாசெல்வனையும் பெற்றெடுத்து
சிறப்பாகதொட்டிலிட்டு ஆட்டுவாளாம்
பாரப்பாபார்த்தவர்கள் பிரமிக்கத்தான்
பாங்கியவள்ஸ்தனங்குலுங்க வருவாள்பாரே. 114

### 5-ல் வி-ச-சு

பாரப்பாயின்னமொன்று பகரக்கேளு
பரமகுருபால்மதியும் வெள்ளிமூவர்
சீரப்பா ஜென்மனுக்கு அஞ்சில்தோன்ற
சிறப்பாகமேதினியில் நலமாய்வாழ்வன்
கூறப்பாகுருவிருந்தால் புத்திரரற்பம்
குளிர்ந்தமதிதானிருந்தால் பெண்ணதாகும்
வீரப்பாவெள்ளிநின்றால் யோகம்மெத்த
விளம்புவாய்புவியோர்க்கு உலகின்கண்ணே. 115

கண்ணப்பாயின்னமொரு கருத்தைக்கேளு
கனத்ததொருலாபத்தில் நிதியில்தோன்ற
உண்ணப்பாஉயர்நிதியோன் நிதியில்தோன்ற
உத்தமனுந்தண்டிகையும் துரகமுள்ளோன்
பண்ணப்பாபுதைப்பொருளும் கிட்டுங்கிட்டும்
பலமானவித்தையடா யிருக்கும்பாரு
திண்ணப்பாபோகருட கடாக்ஷத்தாலே
திடமானபுலிப்பாணி சாற்றினேனே. 116

### 7-ல் குரு சந்திரன்

பாரப்பாயின்னமொரு புதுமைகேளு
பால்மதியும்பரமகுரு ஏழில்நிற்க
சீரப்பாஜென்மனுக்கு வேட்டலில்லை
செந்திருமால்தேவியுமே விலகிநிற்பள்
கூறப்பாகுமரியவ ளில்லாமல்தான்
குமரனுட்வங்கிஷமும் நாசமாச்சு
ஆரப்பாஅயன்விதியை கூறலுற்றேன்
அப்பனேபுலிப்பாணி பாடினேனே. 117

### 4-ல் பு-சு

பாடிடுவாய்புந்திவெள்ளி நாலில்நிற்க
பகருகின்றபதியோனும் கேந்திரமேற
நாடிடுவாய்நாலிலுள்ளோன் சுபர்கள்நோக்க
நற்சுகமும்மேடையுண்டு நாடுமுள்ளோன்
கூடிடுவாய்குமரனுக்கு யோகம்மெத்த
குவலயத்தில்பேர்விளங்கோன் நிதியுமுள்ளோன்
ஆடிடுவாய்ஆரல்நிற்கும் நிலையைப்பார்த்து
அப்பனேபுவியோர்க்கு கூறுவீரே. 118



### 6-க்குடையவன் கேந்திரிக்க

ஆரப்பாயின்னமொரு சேதிகேளு
அப்பனேஆறுனும் கேந்திரகோணம்
சீரப்பாஜென்மனுக்கு இராஜதோஷம்
செப்புகிறேன்சோரர்பயம் சோரத்தால்துன்பம்
கூறப்பாகுடும்பத்தில் களவும்போகும்
கூச்சலிட்டுவெளிவருவள் குமரிதானும்
வீரப்பாவிஷபயமும் வெடியால்துன்பம்
விளையுமடாபலதுன்பம் இன்னம்கேளே. 119

### 4-ல் சுக்கிரன்

ஆரப்பாயின்னமொன்று அறையக்கேளு
அப்பனேஅசுரகுரு நாலிலேற
சீரப்பாசெழுமதியும் ஜென்மம்ஜென்மம்
செல்வனுக்குயோகங்கள் கூறக்கேளு
வாரப்பாவாகனங்கள் பூமியுள்ளோன்
வளமானயோகனடா வையகத்தில்
கூறப்பாகொடுஞ்சனியும் புத்தில்நிற்க
கூறுவாய்குளவிக்கு யோகங்கூறே. 120

### மதிக்கு 6-7-8-ல் சுபர்

ஆரப்பாயின்னமொன்று அறையக்கேளு
அப்பனேஅம்புலிக்கு ஆறேழெட்டில்
சீரப்பாசுபர்நிற்க ஜென்மன்தானும்
சிறப்பாகமேதினியில் நலமாய்வாழ்வன்
பூரப்பாபேய்பூதம் வசியமாகும்
பூதலத்தில்அரசனிடம் சேனைகாப்பன்
கூறப்பாகுடிநாதன் கெட்டானானால்
குமரனுக்குயோகங்கள் குலைந்துபோச்சே. 121

### குரு சந்திரயோகம்

கூறப்பாயின்னமொரு புதுமைசொல்வேன்
குமரனுக்குகுருச்சந்திர பலனைக்கேளு
சீரப்பாசெம்பொன்னும் மனையுங்கிட்டும்
ஜெனித்ததொருமனைதனிலே தெய்வங்காக்கும்

கூறப்பாகோதையரால் பொருளும்சேரும்
குவலயத்தில்பேர்விளங்கோன் கடாக்ஷமுள்ளோன்
ஆரப்பா அத்தலத்தோன் மறைந்தானானால்
அப்பலனையறையாதே!புவியுளோர்க்கே. 122

## 4-ல் மதி-செ-6 க்குடையவன்

ஆமப்பா இன்னமொன்று அறையக்கேளு
அம்புலியும் ஆறோனும் ஆரல்மூவர்
நாமப்பா நாலதனில் குடியிருக்க
நரசுகமுமில்லையடா ஜென்மனுக்கு
கோமப்பா புதல்வனையும் பெற்றெடுந்த
பொற்கொடியாள்புக்கிடுவள் சோரனோடே
வேமப்பாபோகருட கடாக்ஷத்தாலே
வினைப்பயனைப்புலிப்பாணி பாடினேனே. 123

## வி-சு-சனி-செ-பு

போச்சப்பாயின்னமொரு பேச்சுகேளு
பொன்னுவெள்ளிசனிசெவ்வாய் புந்திஐவர்
ஏச்சப்பாயெத்தலத்தில் கூடிட்டாலும்
என்மகனேயென்னசொல்வேன் இராஜகள்ளன்
ஆச்சப்பா அரண்மனைக்குள் புகுந்தானானால்
அங்கிருக்குந்தலையாரி உறங்கிப்போவான்
வீச்சப்பாபோகருட கடாக்ஷத்தாலே
விதமானபுலிப்பாணி விளம்பினேனே. 124

## பாக்கியாதிபதி திரிகோணம்

அறிவித்தேன் ஐந்துக்கு ஐந்தோனானும்
அப்பனே அப்பதிக்கு கோணந்தன்னில்
தெரிவித்தேன் திரவியமும் காடியுண்டு
திடமானமனைகட்டி ஆளுவானும்
குறிவித்தேன் ஆலயமும் பழுதுபார்ப்பன்
கொற்றவனே ரஜிதபாத் திரமுங்கொள்வன்
புரிவித்தேன்பதியோனும் வியமாறெட்டில்
புகருதேபண்டுபொருள் விரையமாமே. 125



## செய்க்கு 6-3-12-ல் சுக்கிரன்

தேரானசெவ்வாய்க்கு வியமாறெட்டில்
திடமுள்ளசுக்கிரனு மதனில்மேவ
பாரானபண்டுபொருள் பணைபால்வாதம்
பகருகின்றபங்காளி துணைவனாலும்
கூறுனகுழவிக்கு யெதிரியாலே
கொற்றவனேயதிகாரி யாலும்வெற்றி
சீரானசெவ்வாயும் இதுபோல்செப்பு
சிவசிவாசித்திரமும் திசையைப்பாரே. 126

## நாலுபேர்கள் மறைந்தும் யோகம் வருவது

வீரப்பாயின்னமொரு வினையைக்கேளு
விளம்புகிறேன் நிதிகருமன் தனமும்நாலோன்
நாரப்பா நால்வர்களும் மூடமானால்
நரபதிபோலிருப்பதற்கு வகையைக்கேளு
ஆரப்பா அருக்கன்பின் புந்திசேயும்
அப்பனே அடைவாகத் தனித்திருக்க
சீரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
சிறப்பாகமேதினியி லிருப்பன்பாரே. 127

## ஆறுமிடம் தீயர் நிற்க

பாரப்பாபகலவனும் சனிசேய்பாம்பு
பகருகின்றஇக்கோள்க ளாறில்நிற்க
கூறப்பாகுமரனையும் சத்துருகண்டால்
குவலயத்தில்புலிகண்ட பசுபோலாவார்
சீரப்பாசெம்பொன்னும் சென்னுடுண்டு
செயலாகவாழ்ந்திருப்பன் விதியுந்தீர்க்கம்
ஆரப்பா அத்தலத்தோன் விழுந்துகெட்டால்
அப்பனேஅரியைப்போ லிருப்பன்பாரே. 128

## இராசியாதி கொடியோரைச் சேர்ந்தது

கூடுறேநீகொடியோர்கள் ராசியாதி
கொற்றவனேகூடினால் கொடுமைமெத்த
ஏரேநீராஜபயம் பொருளுஞ்சேதம்
இடர்தோஷம்பிணிகண்டம் களவும்போரும்

சீரேநீசந்திரனும் கண்ணுற்றுலும்
செம்பொன்னும்கிட்டுமடா ஜென்மனுக்கு
வீரேநீபோகருட கடாக்ஷத்தாலே
வினைப்பயனைப்புலிப்பாணி விரித்தேன்பாரே. 129

## கூட்டுக்கிரகம்

ஆரப்பா நாலைந்து பேர்கள்கூட
அப்பனேரெண்டொருவர் முன்பின்நிற்க
பாரப்பாபண்டுபொருள் பதியும்தீது
பதிகடந்துஅலைவனடா பொருளுங்கொஞ்சம்
கூறப்பாகுடிநாதன் சேர்ந்திருக்க
கொற்றவனேகுழவிக்கு நிதியும்மெத்த
சீரப்பபோகருட கடாக்ஷத்தாலே
செப்பினேன்புலிப்பாணி திறமாய்த்தானே. 130

## 5-6-க் குடையவர் சேர

ஆரப்பா அயன்விதியை அறையக்கேளு
அப்பனேஐந்துள்ளோன் ஆறோன்கூடில்
சீரப்பா ஜென்மனுக்கு புத்திரதோஷம்
சிவாசிவாயிதுமூன்றில் சேர்ந்துநிற்க
கூறப்பாகொடியோர்கள் கண்ணுற்றுலும்
கொற்றவனேகொள்ளிக்குப் பிள்ளையில்லை
பாரப்பாபரமகுரு கண்ணுற்றுலும்
பலனுண்டுபலதீர்த்த மாடச்சொல்லே. 131

## 9-6-ல் சனி சூரியன்சேர

பாரப்பாபாக்கியமும் ஆறோன்வீட்டில்
பகருகின்றசனியோடு வெய்யோன்மேவ
கூறப்பாகுழவிக்கு பாக்கியமுண்டு
குவலயத்தில்பிரசங்கி செய்யுளுள்ளோன்
வீரப்பாமற்றவிடந் தனிலேநிற்க
விநோதகனும்கூத்தாடி வேடக்காரன்
சீரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
செயலறிந்துபுவியோர்க்கு செப்புவாயே. 132

## வி-பு-சு-பு-சனி-பு

பாரப்பா குருபுந்தி சேர்ந்துநிற்கப்
பாக்கியங்கள்கிட்டுமடா புனிதன்சேயின்



ஆரப்பா அசுரகுரு புந்திசேர
அப்பனேபாடகனும் பெரியோர்நேசம்
கூறப்பா கொடுஞ்சனியும் புந்திமேவ
கொற்றவனேகணிதனடா சத்துருயில்லை
வீரப்பாவிஷயமும் இல்லையில்லை
வெகுதனங்களுள்ளவனும் விளம்பக்கேளே. 133

## மதி-பு-சனி-செ

கேளப்பாகலைபுந்தி சனிசேய்சேர
கெட்டவனும்துக்கிசதா நித்திரையுள்ளோன்
ஆளப்பா அகமில்லை தரித்திரனுவன்
அப்பனேஅயன்விதியும் மெத்தவுண்டு
சீளப்பாசேய்இந்து சனிமால்வெள்ளி
சேர்ந்துநிற்கஅய்யமெடுத் துண்பன்காணே
கூளப்பாகுருபார்க்க வேதையில்லை
கொற்றவனேகுசவன்விதி கூறினேனே. 134

## 4-8-1-ல் சூரியனும் புதனும்சேர

பாரப்பாஈறிரண்டுதனில் இருநான்கொன்றில்
பகருகின்றபகலவனும் புந்திகூடில்
நீரப்பாநிதிகருமன் கண்ணுற்றுலும்
நிலத்தில்நல்லபூபதிபோ லிருப்பன்காணே
கூறப்பாகுதிரைகளுங் காடியுண்டு
கொற்றவனேஏவலாள் மெத்தவுண்டு
ஆரப்பா அயிஸ்வரியம் மெத்தவாழும்
அப்பனேராசியுட பலத்தால்கூறே. 135

## ச-சூ, வி-சூ, சு-சூ, சு-சனி

ஆரப்பா அம்புலியும் ரவியும்சேர
அப்பனேதனமுண்டு களத்திரநேசன்
ஆரப்பா அரசனுடன் அருக்கன்சேர
அரசனெடுஅயிஸ்வரியம் மெத்தவுண்டு
ஆரப்பாஅசுரகுரு வெய்யோன்மேவ
அப்பனேவசியனடா களத்திரபோகி
ஆரப்பாஅசுரகுரு நீலன்மேவ
அடங்காதகளத்திரமா மறிந்துசொல்லே. 136

செ-பு-வெ

பாரப்பாபவுமனும் புந்திவெள்ளி
பாங்கானஎத்திடத்தி லமர்ந்திட்டாலும்
பாரப்பாபாலனுக்கு தேகபங்கம்
பதினெட்டுசித்தர்களும் செப்பலுற்ருர்
பாரப்பாகுருவோடு சேயும்வெள்ளி
பார்மன்னர்நேசனடா பாக்கியமெத்த
பாரப்பாபவுமனும் புந்திமேவ
பண்டிதனும்பாக்கியமு முண்டுபாரே. 137

விரையாதி இரண்டாமிடமேற

தானப்பாயின்னமொரு புதுமைகேளு
தனமென்றஇரண்டதனில் விரையன்நிற்க
ஊனப்பாஉப்பரிகை மாடகூடம்
உத்தமனேகட்டிடுவன் உதையம்பாரு
ஏனப்பாஎங்கோனும் இந்துபுந்தி
இதமுள்ளசுக்கிரனு மில்லுமாகில்
சீனப்பாசெம்பொன்னும் சென்ருடுண்டு
சிவசிவாசித்திரமும் திசையில்சொல்லே. 138

சூ-ச செ-பு-வி, சூ செ-சு சனி

விளம்பினேன்வெண்மதிசேய் புந்தியோடு
வெய்யவனும்வியாழனும் சேர்ந்துநிற்க
விளம்பினேன்விணயனடா சென்மன்தானும்
வெகுபேரைக்கெடுத்திடுவன் கோள்சமர்த்தன்
விளம்பினேன்வெய்யவனும் சேய்சுன்நீலன்
வீற்றிருக்கவீடுதோறும் பலியேகொள்வன்
விளம்பினேன்போகருட கடாக்ஷத்தாலே
விதமாகபுலிப்பாணி விளம்பினேனே. 139

ச-வி-பு, ச-பு சு

ஆச்சப்பாஅம்புலியும் வியாழன்புந்தி
அடைவாகசேர்ந்திருக்க சென்மன்தானும்
ஆச்சப்பாஅழகனடா நிதியுமுள்ளோன்
அயன்விதியுமெத்தவுண்டு அறையக்கேளு



ஆச்சப்பாஅம்புலியும் புந்திவெள்ளி
அடைவாகமூவர்களும் சேர்ந்துநிற்க
ஆச்சப்பாஅழும்பனடா காமிதுஷ்டன்
அப்பனேபுலிப்பாணி அறைந்திட்டேனே. 140

சூ-பு-வி-வெ

ஆரடாகுருபுந்தி வெய்யோன்வெள்ளி
அப்பனேநால்வர்களும் சேர்ந்துநிற்க
சீரடாசென்மனும் செம்பொன்னுள்ளோன்
திடமானபோகனடா வையகத்தில்
கூறடாகுருவெள்ளி ரவியும்சேயும்
கொற்றவனேசேர்ந்திருக்க குடும்பிமெத்த
வீரடாபணியுண்டு நிதியுமுண்டு
வேட்டல்களும்மெத்தவுண்டு விளம்பினேனே. 141

பு-ச-வெ-வி-சனி-செ, பு-சனி

படித்திட்டேனின்னமொன்று பகரக்கேளு
பரமகுருசனிசெவ்வாய் புந்தியோடு
அடித்திட்டேனம்புலியும் வெள்ளிமேவ
அப்பனேஅண்டங்கள் அளவெடுப்பன்
குடித்திட்டேன்குருபுந்தி சனிசேய்இந்து
கொற்றவனேசேர்ந்திருக்க தரித்திரதோஷம்
இடித்திட்டேன்போகருட கடாக்ஷத்தாலே
இதமானபுலிப்பாணி சாற்றினேனே. 142

சேய்க்கு 4-7 ல் வெள்ளி

பாரப்பாபவுமனுக்கு நாலேழ்வெள்ளி
பகருகின்றவெள்ளிக்கு ஐந்தேழ்லாபம்
சீரப்பாசேய்நிற்க ஜென்மன்தானும்
சிறப்பாகமேதினியில் நலமாய்வாழ்வன்
கூறப்பாகுடிநாதன் கேந்திரகோணம்
கொற்றவனேவாகனமும் தொழிலுமுள்ளோன்
பாரப்பாபாக்கியமும் நிலமுங்கிட்டும்
பகருவாய்திசைபுத்தியில் பலிக்குந்தானே. 143

### வி-சு-சனி-பு-ச

கூறினேன்குருவெள்ளி சனிமால்இந்து
கொற்றவனேசேர்ந்திருக்க அங்கயீனம்
தேறினேன்தேவகுரு புந்தியோடு
திடமாகமதிவெள்ளி சேர்ந்துநிற்க
ஆறினேனகம்பொருளும் நிலமுஞ்செம்பொன்
அப்பனேகிட்டுமடா அவனியில்வாழ்வன்
சீரினேன்போகருட கடாக்ஷத்தாலே
சிறப்பாகபுலிப்பாணி செப்பினேனே. 144

### ச-செ-பு-வி வெள்ளி

ஆச்சப்பா அம்புலியும் வெள்ளியோடு
அடைவாககுருபுந்தி சேயும்சேர
கூச்சப்பாகுலவானும் கிரகமுண்டு
குவலயத்தில்நிதிபணியும் மெத்தவுண்டு
பேச்சப்பாவெகுபேரை ஆதரிப்பன்
பிரபலமாய்வாழ்ந்திருப்பன் அவனிதன்னில்
வீச்சப்பாபோகருட கடாக்ஷத்தாலே
விதமாகபுலிப்பாணி விளம்பினேனே. 145

### வி சு-வி-சனி, பா-சனி, பு-சனி

செப்புவாய்குருவோடு வெள்ளிகூடில்
ஜென்மனுக்குயோகவிதி செம்பொன்னுள்ளோன்
அப்புவாய்அந்தணனும் நீலன்கூடில்
அப்பனேபுத்திரர்கள் ஈனமாகும்
ஒப்புவாய்உதயத்தில் சனியும்பாம்பும்
உத்தமனேநோயதுவே காத்திருக்கும்
தப்புசனிபுதனுதயம் தயவாய்சேர
தரணிதனில்கூனனடா தெரிந்துகொள்ளே. 146

### 6-க்குடையவன் 2-லும் 2-க்குடையவன் 6-லும்

கூறினேன்ஆருேனும் மலேக்கிரண்டில்
கொற்றவனேஎதிரினுட பொருளுஞ்சேரும்
நீரே நீகுடும்பாதி விழுந்துகெட்டால்
நிலத்தில்நல்லகனவாளி கஞ்சன்பொய்யன்



ஆரே நீதனபதியும் ஆறிலேற
அப்பனேயெதிரிக்கு அவைபோல்செப்பு
காரே நீபோகருட கடாக்ஷத்தாலே
பண்பாகபுலிப்பாணி பகர்ந்தேன்பாரே. 147

### ஏழரைநாட்டுச் சனி

பாரப்பாபனிரெண்டு ஜென்மம்ரெண்டில்
பங்கானமுடவன் சஞ்சாரம்நாளில்
சீரப்பாசிரநோயும் அம்மைபேதி
சிவசிவாசலபயமும் பொருளுஞ்சேதம்
கூறப்பாகுடியோடிப் போகச்செய்வன்
கொற்றவனேகுடும்பத்தில் களவுபோகும்
வீரப்பாவெகுபேர்க்கு கொடியோனுகி
விளங்குவோன்புவிதனிலே விளம்பக்கேளே. 148

### இதுவுமது

கேளப்பாகடகம்தேள் சிம்மம்ஜென்மம்
கெடுதிமெத்தசெய்வனடா வேதைதானும்
நாளப்பாநலமாகும் மற்றராசி
நரச்சுதமும்கிட்டுமடா வேட்டலுண்டு
கூளப்பாகோதையினுல் பொருளுஞ்சேதம்
கொற்றவனேகடன்வந்து தீருமென்றே
ஆளப்பாதிசைபாரு வலுவைநோக்கி
அப்பனேமுடவன்செய் வலுவைக்கூறே. 149

### வாக்கில் சனி

பாரப்பா இன்னமொன்று பகரக்கேளு
பானுமைந்தன்பால்மதிக்கு வாக்கில்வந்தால்
சீரப்பாமேம்பாடு சவுக்கியம்செம்பொன்
சிவசிவாகிட்டுமடா வேட்டல்கூடும்
கூறப்பாகோதையினுல் பொருளுஞ்சேரும்
கொற்றவனேகுடிநாதன் வலுவைப்பாரு
ஆரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
அப்பனேபுலிப்பாணி அறைந்திட்டேனே. 150

### 5-ல் கருநாகம்

பாரப்பா இன்னமொன்று பகரக்கேளு
பஞ்சமத்தில்கருநாகம் அமைந்துநிற்க

சீரப்பாசெங்கதிரோன் பார்த்திட்டாலும்
ஜென்மனவன்பிரதேச வாசஞ்செய்வன்
ஆரப்பாஅகம்பொருளும் நிலமும்கிட்டும்
அப்பனேஅவன்பிதா லச்சைபண்ணுன்
கூறப்பாகுமரனுக்கு அறுபத்தஞ்சில்
கூற்றுவனூர்நிரியாணஞ் சாற்றினேனே. 151

## 5-க்குடையவன் பாம்பைச்சேர

ஆச்சப்பாயின்னமொரு சேதிகேளு
அஞ்சுள்ளோன்தீயனுய் அரவைக்கூடி
கூச்சப்பாநாடியே மூன்றில்நிற்க
குமரனுடமனைவியெண்ணங் கருத்தைக்கேளு
பாச்சப்பாபுருஷனிடம் சண்டையிட்டு
பதறிவிழுந்தோடிடுவள் கொடியநீலி
ஏச்சப்பாவெகுபேர்க்கு இவள்மேல்மோகம்
இவளாலேகெட்டவர்கள் அநேகம்பேரே. 152

## 3-க்குடையவன் பாம்பைச் சேர

பாரப்பாயின்னமொரு புதுமைகேளு
பாம்புடனேமூன்றேனும் தீயனுகில்
கூறப்பாயெத்திடத்தில் கூடிட்டாலும்
குமரிகள்ளபுருடனையும் கூடுவாளாம்
ஆரப்பா அகந்தனிலே இவள்தான்மூப்பி
அக்கணவன்அவள்சொல்லை கடக்கமாட்டான்
ஊரப்பாஊருகில் கடலுமுண்டு
உத்தமனேயிருக்குமடா ஆறுமாரே. 153

## 5-ல் ராகுநிற்க

பாரப்பாஇன்னமொரு பகரக்கேளு
பஞ்சமத்தில்கருநாக மறைந்தவாறும்
சீரப்பாஜென்மனுக்கு புத்திரதோஷம்
தீர்ப்பதற்குவகைவிவரம் சொல்வேன்மைந்தா
கூறப்பாகோதையுமே அரசுசுத்தி
குற்றமில்லாக்கன்னியற்கு உத்தமஸ்நானம்செய்து
வீரப்பாவிலகுமடா தோஷம்தோஷம்
விதியுள்ளஜென்மனவன் ஜெனிப்பன்பாரே. 154



## ராகு கேந்திரகோணம்

கேளப்பாஇன்னமொரு புதுமைகேளு
கனமானகரும்பாம்பு கேந்திரகோணம்
ஆளப்பாஅத்தலத்தோன் சுபரைக்கூட
அப்பனேசேர்ந்தாலும் கண்ணுற்றாலும்
சீரப்பாஜென்மனுக்கு யோகம்மெத்த
சிவசிவாகிளர்யோகம் திடமாய்செப்பு
கூறப்பாகுடிநாதன் சேர்ந்துநிற்க
குமரனுக்குஅனுதினமும் பலனைக்கூறே. 155

## பாம்பு

பாரப்பாயின்னமொரு புதுமைகேளு
பகருகின்றபாம்புடனே ஒருவன்சேர
வீரப்பாவிருபுறமும் மற்றோர்நிற்க
வேந்தனுக்குவேந்தனும் கொடியவீரன்
கூறப்பாஜெகமதனில் கெஜமுமுள்ளோன்
கொற்றவனேதுரகமது மெத்தவுண்டு
வீரப்பாவேடர்புடை கோடியுள்ளோன்
விதமானபுலிப்பாணி சொன்னேம்நாமே. 156

## 4-க்குடையவன் நின்றபதிக்கு 10-க்குடையவன் சேர

பூட்டுகிறேன்இன்னமொன்று புதுமைகேளு
புகழ்பெரியஈறிரண்டுக் குடையோநின்ற
ஆட்டுகிறேன்அப்பதிக்கு பத்தோன்தானும்
அப்பனேஇறையோனைக் கூடிட்டாலும்
கூட்டுகிறேன்குழவிக்கு பூமிமெத்த
குவலயத்தில்பேர்விளங்கும் போகவானுய்
பூட்டுகிறேன்போகருட கடாக்ஷத்தாலே
பூதலத்தில்இறையோனைப் பார்த்துச்சொல்லே. 157

## 12-6-8-ல் பாம்பு தோன்ற

பாரப்பாபனிரெண்டு எட்டுஆறில்
பலமுள்ளபடவரவு அதிலேதோன்ற
வீரப்பாவேல்விழியாள் கலகமெத்த
விளங்குகின்றகணவனுக்கு ரோகஞ்சொல்லு

கூறப்பாகொழுநனுல் குமரியாலும்
கொற்றவனேகுழவியினுல் குடிக்குகேடாம்
பாரப்பாபடவரவு பொல்லாதப்பா
பலதுன்பம்வருகுமடா திசையைநோக்கே. 158

## சூரியனுக்கு 5-8-9 ல் சுபர் நிற்க

பாரப்பாபகலவனுக் கைந்துஎட்டு
பாக்கியத்தில்சுபர் நிற்க அதனுள்ளோர்கள்
சீரப்பாதிரிகோண கேந்திரமேற
சிவசிவாபிதுருக்கு தனமுஞ்செல்வம்
வீரப்பாவிதியுண்டு வெள்ளிபுந்தி
வீடானுல்அமடில்லை ராஜயோகம்
கூறப்பாபோகருட கடாக்ஷத்தாலே
கொற்றவனேபுலிப்பாணி கூறினேனே. 159

## சூ-சு

காணப்பாகதிரவனும் மதியுங்கூடி
கனமுள்ளலக்கினத்தை கண்ணுல்நோக்க
சீனப்பாசக்கிலியப் பெண்ணைஜென்மன்
சிறப்பாகச்சேர்ந்தணவன் ஜெகத்திலேதான்
ஊனப்பாஉதயவனும் கண்ணுற்ருலும்
உத்தமனேஉலகத்தில் ஒருவர்பாரார்
வீணப்பாபோகருட கடாக்ஷத்தாலே
விதமாகப்புலிப்பாணி விளம்பினேனே. 160

## இதுவுமது

கூறேநீஉப்பரிகை மாடகூடம்
கொற்றவனேசயனசுகம் யோகமுள்ளோன்
வாரேநீவாகனமும் நிதியுமுண்டு
வையகத்தில்விதியுண்டு வேசிநேசன்
ஆரேநீஅசுபர்களுஞ் சேர்ந்திருக்க
அப்பலன்கள்கெட்டாலும் அகமுமுண்டு
சீரேநீச்சாறில் உச்சமானுல்
சிவசிவாதுன்பமொடு இன்பம்சொல்லே. 161

## மதி 6-8-12-ல் நின்ற பலன்

விளம்பிடுவேன்வெண்மதியும் எட்டில்நிற்க
விதிகுறைவுநிதிமனையும் வித்தையுள்ளோன்



களங்கமுள்ளநீர்ப்பயமும் குளிரும்காச்சல்
கனமுள்ளதாய்தந்தைக் கரிட்டஞ்சொல்லு
தளங்கொண்டஆறுக்கு கழிச்சல்போக்கு
தனவிரையம்விதிகுறைவு கருமமாகும்
விளங்குகின்றஅன்னைக்கு தோஷஞ்சொல்லு
விரையமடாவிளைவுகெடும் ஈராறுக்கே. 162

## சேய் சுக்கிரன்

பாரப்பாபவுமனுமே வியமாறெட்டில்
பகருகின்றபளிங்கனுமே பகைவன்வீட்டில்
சீரப்பாசென்மனுக்கு செனனபூமி
சிவசிவாசிக்குமடா ஜலத்தால்கேடு
ஊரப்பாஊரருகில் கிழக்குமேற்கு
உத்தமனேபுஞ்சைநிலத் தாலும்லாபம்
சீரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
சிரிக்குமடாகனகமது கையில்தானே. 163

## ஐந்தில் தீயர் நின்ற பலன்

தானென்றபஞ்சமத்தில் கொடியோர்நிற்கில்
தாரணியில்குடிவிளங்க புத்திரரில்லை
ஊனென்றஉதயாதி பெரியோர்சேர
உத்தமனேஉதித்ததொரு பாலன்தானும்
தேனென்றபிதுருக்கு உதவியுண்டோ
பரைச்சேரியில்வில்வக்கண் முளைத்தாப்போலே
சீனென்றசிவனுக்கு உதவாதப்பா
சிவசிவாபுலிப்பாணி செப்பினேனே. 164

## ஐந்தில் சனி நின்ற பலன்

சொல்லுகிறேன்ஐந்துக்கு கிலேசனுவன்
சுயதேசபரதேச வாசம்செய்வன்
வில்லுகிறேன்விதிகுறைவு மெலிந்ததேகன்
விளங்குகின்றபுத்திரரும் பறந்துபோகும்
புல்லுகிறேன்பெரியோர்கள் கண்ணுற்ருலும்
பூதலத்திலதிகாரி பெரியோர்நேசன்
நல்லதொருதிசைபுத்தி பொருளுஞ்சேரும்
நலமறிந்துசெப்புவாய் சனிக்குதானே. 165

## இலக்கினத்தில் சனி

பாரப்பாயின்னமொரு புதுமைகேளு
பலமுள்ளகதிர் மைந்தன் பதியில்நிற்கில்
சீரப்பாயிளமையிலே மனைவியாதி
செழுமையுள்ளபருவத்தில் செல்வமுண்டு
வீரப்பாவேந்தனுட பொருளுஞ்சேரும்
விளங்குகின்றகொடியோர்கள் சேரலாகா
கூறப்பாபோகருட கடாக்ஷத்தாலே
கொற்றவனேபதியறிந்து பலனைக்கூறே. 166

## 12-4-7-8-2-ல் சனி

புகழ்கின்றஈராறு இருநான்கேழில்
புனிதமுள்ளசனிரெண்டு நான்கில்நிற்க
இகழ்கின்றவாதநோய் நாய்கடிக்கும்
இதமுள்ள அன்னைக்கு கண்டம்நான்கில்
நிகழ்கின்றரெண்டேழில் மனைவிநஷ்டம்
நிஜம்சொன்னேம்எட்டுக்கு உயிர்க்குசேதம்
மகிழ்கின்றஈராறில் விரையமாகும்
துலையுமடாமாடாடு துன்பஞ்சொல்லே. 167

## கோசாரம்

கேளப்பாகுருமூன்றில் கலைதானெட்டு
கேடுசெய்யும்சனிஜென்மம் புந்திநாலில்
சீளப்பாசேயேழு செங்கதிரோன்ஐந்தும்
சீறிவரும்கரும்பாம்பு நிதியில்தோன்ற
ஆளப்பாஅசுரகுரு ஆறிலேற
அப்பனே திசையினுட வலுவைப்பாரு
மாளப்பாகுற்றம்வரும் கோசாரத்தாலே
குழவிக்குநிரியாணங் கூர்ந்துசொல்லே. 168

## பொது

கேளேநீசேல்கன்னி எருதுமிடம்
கெதியுள்ளமகரமடா கடகந்தன்னில்
கூளேநீகரும்பாம்பு அதனில்தோன்ற
கொற்றவனேயோகங்கள் புகழ்ந்திடாதே



சீளேநீகிரகங்கள் நான்குதிக்கில்
சிவசிவாஜென்மனுக் கமைந்திருந்தால்
ஆளேநீயோகங்கள் கூறுஅல்லால்
அப்பனேஅஸ்தகிரி யோகஞ்சாற்றே. 169

## இதுவுமது

சொல்லப்பாசெம்பாம்பு கோணம்லாபம்
சுயதேசபரதேச அரசர்லாபம்
சொல்லப்பாசெம்பாம்பு பொல்லாதப்பா
சிவசிவாசொர்ணங்கள் மனையும்சிக்கும்
இல்லப்பாஇந்திரனூர் பகவிகிட்டும்
இல்லறத்தில்வல்லனடா குணிதம்பார்ப்பன்
புல்லப்பாகருநாகம் கேந்திரங்கள்
புனிதமுள்ளசெம்பாம்பின் பதியைப்பாரே. 170

## இதுவுமது

வாரேநீயின்னமொன்று வழுத்தக்கேளு
வளர்மதியும்நல்லவனு யமர்ந்திட்டாலும்
சீரேநீசனியவனைப் பார்த்திட்டாலும்
செழுமையுள்ளசந்திரனூர் திசையைக்கேளு
கூறேநீகுமரனுக்கு பசும்பொன்கிட்டும்
குவலயத்தில்கடன்கொடுப்போன் வேந்தனுக்கு
பாரேநீபால்மதியும் பூசம்மூணில்
பகருவாய்புலிப்பாணி குறித்திட்டேனே. 171

காணப்பாஇன்னமொரு கருத்துக்கேளு
கருமனுமோகருமத்துக் கருமஸ்தானம்
ஊணப்பாஉற்றதனம் லாபம்ஏற
உத்தமனும்நிதியுடையோன் கருமமுள்ளோன்
தானப்பாதருமங்கள் யாகஞ்செய்வன்
தரணிதனில்கிராமங்கள் உண்டுபண்ணி
வீணைப்பாபோகருட கடாக்ஷத்தாலே
விதமானபுலிப்பாணி விரித்தேன்பாரே. 172

சாற்றினேனின்னமொன்று செப்பக்கேளு
சந்திரனூற்கீரைந்தில் எங்கோனிற்க

கூற்றினேன் குமரனுக்கு யோகம்மெத்த
கோவையிடம்சேனுதி பதியுமாவன்
பூட்டினேன்பீரங்கி வெடியினுலே
போர்புரியும்வீரர்களைச் சின்னஞ்செய்வன்
நாட்டினேன் நரக்குருவும் தனுசிலேற
நலமாகபுலிப்பாணி இடித்திட்டேனே. 173

இடித்திட்டேனின்னமொன்று இயம்பக்கேளு
இந்துவுக்குஈரைந்தில் எங்கோனிற்க
அடித்திட்டேன் அத்தலத்தோன் கேந்திரிக்க
அப்பனேசாமியுந்தான் அஞ்சுநாலில்
குடுத்திட்டேன்குழவிக்கு வித்தைபுத்தி
குவலயத்தில்பேர்விளங்கோன் படைக்குஆட்சி
படித்திட்டேன்போகருட கடாக்ஷத்தாலே.
பண்பாகபுலிப்பாணி நடித்திட்டேனே. 174

நடித்திட்டேனின்னமொன்று நாட்டக்கேளு
நரக்குருவும்அசுரகுரு அனலன்பின்னுல்
படித்திட்டேன்பலகவியும் நூல்கள்கற்போன்
பலமானவித்தையென்று புவியில்வாழ்வன்
இடித்திட்டேன்எட்டுபத்து எட்டுஆண்டில்
ஈசன்லபிமுடியுமடா சிசுவுக்கேதான்
குடுத்திட்டேன்குளவிக்கு பாலயோகம்
குணமாகபுலிப்பாணி அறைந்திட்டேனே. 175

### கிரகநாடி

பாரப்பா இன்னமொரு விவரங்கேளு
பகர்புதனுங்குருசனியும் வாதநாடி
சீரப்பாதுர்க்கிரகம் சூரிசேயும்
சிறப்பானபாம்புகளும் பித்தநாடி
நேரப்பாபால்மதியும் சுங்கன்தானும்
நேர்மையுள்ளசிலேட்டுமத்தின் கிரகமென்று
வீரப்பாபோகருட கடாக்ஷத்தாலே
விவரமெலாம்புலிப்பாணி விளம்பக்கேளு. 176

கேளப்பாபண்டிதனே குறிப்புசொல்வேன்
கெவுனகுளிசித்தர்களும் பிரித்துசொல்லார்



ஆளப்பா அம்புவியில் பிறந்தோர்க்கெல்லாம்
அவரவர்கள்ஜனித்த ஜாதகத்தைப்பார்த்து
நாளப்பாதிசைபார்த்து ஊனும்பார்த்து
நடந்திடுமக்காலத்தின் சித்திரமும்பார்த்து
கோளப்பாகிரகத்தின் நாடிக்கேற்ற
கொடுத்திடுவாய்பிணிமருந்து குறித்திட்டேனே. 177

குறித்திட்டேனட்டமத்தின் செயலேயானுல்
கொடும்பித்தநாடியதின் பிணியுமானுல்
மறித்திட்டேபோகுமடா மருந்துவேண்டாம்
மற்றுமுள்ளசஷ்டமத் திற்குஜயம்
சிரித்திட்டேன்வியத்தானம் தனக்குவாதம்
சிறப்பாகநடக்காமல் மாறுமானுல்
தரித்திட்டேன்மருந்துதனை யீவாயென்று
தயவுடனேபுலிப்பாணி சாற்றினேனே. 178

சாற்றினேன்கும்பத்தில் பிறந்தோன்ஞானி
சார்வானதுலையதுவும் சாஸ்திரவல்லோன்
போற்றினேன்புதனதுவும் கேந்திரகோணம்
பொல்லாதசனியனுமே துலங்கவேண்டும்
தூற்றினேன்கலைமதியும் லக்கினகேந்திரம்
சொற்பெரியநரகுருவும் வாக்கில்நின்ருல்
சாற்றினேன்பண்டிதனும் போகர்நூலால்
சார்வானபுலிப்பாணி சாற்றக்கேளே. 179

பாக்கியத்தில்வீரியத்தோ னிருக்கத்தன்னை
பகரவேவெள்ளிகுரு பார்க்கநிற்க
யோக்கியமுடசிவதலத்தில் ஞானியாகி
யுலகுமெய்க்கமடபதியா யிருப்பானென்று
தீர்க்கமுடனவனிதனி லறியவேண்டி
செப்பினேமிதையறிந்து செகத்தில்யார்க்கும்
ஆக்கமுடன்போகருட கடாக்ஷத்தாலே
யவனிதனில்புலிப்பாணி யறைந்திட்டேனே. 180

உடலுயிற்குமூன்றுமிடத் ததிபன்மந்தன்
உடன்கூடியொருராசி நின்ருராகில்
திடமுடனேயவர்திசைகள் பொசிப்பில்நஞ்சு
தின்றதினுலவனுயிர்க்குச் சேதமாகும்

பாடமுடையராகுடனே இவர்கள்கூடில்
பாசத்தாலிவனுயிரை மாய்த்துக்கொள்வான்
அடவுடனேபோகருட கடாக்ஷத்தாலே
அரியநூல்புலிப்பாணி அசைத்திட்டேனே. 181

பாரப்பாவீரியத்தோன் குருவும்லக்கினத்திலேறில்
பண்புடனேமிருகத்தால் பாவர்திசைதுன்பமாகும்
சேரப்பாவட்டமத்தோ னிவர்களோடே
சேர்ந்தாருமிடந்தனிலே நிற்பாராகில்
கூறப்பாசண்டைபல கருவியாலே
கொடுந்துன்பம்ஜென்மனுக்கு வாதையாகும்
நேரப்பாஎனதுகுரு கடாக்ஷத்தாலே
நேர்மையுடன்புலிப்பாணி நிகழ்த்தினேனே. 182

தானனயின்னமொரு சேதிகேளு
தன்மையுடன்சந்திரனு லதிபனெட்டில்
வீணனதீக்கோட்கள் பலருங்கூடி
விரும்பிசட்டாட்டமதி லிருந்தாரானல்
கோணன அஜீரணத்தா லிறப்பதல்லால்
கொடுமருந்தூடுபயம் சோற்றுலச்சம்
தேனனபோகாது தாள்வணங்கி
தெரிந்துசிறுபுலிப்பாணி பாடினேனே. 183

பாடினேனின்னதென்று ஆரேனேடே
பகர்லக்கினசாமியவன் சேர்ந்துவாழ
கூடினேன்கரும்பாம்பும் குலவிநிற்க
கொடுமருந்தால்சாவுவரும் கொடுத்திடாதே
தேடினேன்சனியொருகோள் சேர்ந்தானுகில்
தேடிவரும்ஜலகண்ட நிரியாணந்தான்
நாடினேன்நவக்கிரக சாரங்கண்டு
நன்மையுடன்புலிப்பாணி நூலைப்பாரே. 184

பாரப்பாயின்னமொரு செயலைக்கேளு
பால்மதியைப்பெரியோர்கள் நீசம்பெற்று
கூறப்பாகொடுங்கண்ணல் நோக்கினலும்
குவலயத்தில்செடிமறையில் ஜெனித்தபிள்ளை
ஆரப்பா அசுபர்களும் நீசம்பெற்று
அம்புலியைஅரைக்கண்ணல் நோக்கினலும்



நீரப்பாநீச்சநில்லு வாசல்திண்ணை
நிலவரமாய்பெற்றெடுத்த சிசுதான்சொல்லே. 185

## புதன் நிலைமை

சொல்லுகிறேன் இருமூன்று ஈராறெட்டும்
சுகமில்லைஜென்மனுக்கு குய்யரோகம்
சொல்லுகிறேன்செம்பொன்னும் கணைக்கால்துன்பம்
சுற்றத்தார்மனமுறிவர் அரிட்டஞ்செப்பு
சொல்லுகிறேன்கேந்திரமும் கோணம்நன்று
சுகமாகவாழ்ந்திருப்பன் காடியுள்ளோன்
சொல்லுகிறேன்சுயகவிதை மாமன்விருத்தி
சொர்ணநிலமுள்ளவனு மாலுகூறே. 186

## குரு-கோசார பலன்-ஜென்மத்தில்

பாரப்பாஇன்னமொன்று பகரக்கேளு
பரமகுருஜென்மத்தில் வந்தபோது
கூறப்பாகோதண்ட பாணிவீரன்
கொற்றவனேகுடியேறிப் போகச்செய்தார்
சீரப்பாஜென்மனுக்கு வேதைமெத்த
சிவசிவாசெம்பொன்னும் நஷ்டமாகும்
வீரப்பாவேந்தனும் தோஷமுண்டு
விளம்பினேன்கோள்சார வினையைக்கேளே. 187

## மேற்படி மூன்றில் வந்த பலன்

கேளப்பாகுருபதியும் மூன்றிலேறக்
கெடுதிமெத்தசெய்வனடா வேந்தன்தானும்
ஆளப்பாஅகத்திலே களவும்போகும்
அப்பனேஅரிட்டமடா சிசுவுக்கேதான்
கூளப்பாகுவலயங்க ளெல்லாமாண்ட
குற்றமிலாகாந்தாரி மகனும்தானும்
வீளப்பாவீமன்கை கதையினலே
விழுந்தானேமலைபோலே சாய்ந்தான்சொல்லே. 188

## மேற்படி ஆறில் வந்த பலன்

பாரப்பாபரமகுரு ஆறிலேற
பலமுள்ளமாபலிச் சக்கிரவர்த்தி

சீரப்பாசிறைகூடம் சென்றாரப்பா
சிவசிவாதேவர்கள்தன் கொடுமையாலே
ஈரப்பாஇராஜபயம் கலகம்துன்பம்
இல்லறத்தில்களவுபோம் கிலேசம்மெத்த
வீரப்பாவெகுபயமாம் சர்ப்பதோஷம்
வேந்தன்நின்றபதியறிந்து வினையைமூட்டே. 189

### மேற்படி நான்கில் வந்த பலன்

சொல்லப்பாசூதாட்டம் கொடியதப்பா
சுகமுள்ளபஞ்சவர்கள் வினையினாலே
அல்லப்பாஅகிலங்கள் எல்லாம்தோற்று
அப்பனேஆரணியம் சென்றாரைவர்
நல்லப்பாநாலதனில் குரவுமேற
நாச்சுகமுங்கிட்டாது நலிவுமுண்டு
மல்லப்பாமண்ணாலும் பொன்னால்வேதை
மகத்தானகுருபதியின் கடாக்ஷத்தாலே. 190

### மேற்படி எட்டில் வந்ந பலன்

மூட்டப்பாஇன்னமொரு மொழியைக்கேளு
மூர்க்கமுள்ளவாலியுமோ சத்ருபங்கன்
கூட்டப்பாகோதண்ட பாணிஅம்பால்
கொற்றவனேமலைபோலே சாய்ந்தான்காணே
நாட்டப்பாஜென்மனுக்கு நமனால்கண்டம்
நலந்தப்பும்பொருள்சேதம் அரசர்தோஷம்
வீட்டப்பாவேதியனும் மதிக்குஎட்டில்
விளங்கவேவெகுபயமா விளைவுபோமே. 191

### மேற்படி 10-ல் வந்த பலன்

போமப்பாயின்னமொரு புதுமைகேளு
பொன்னனுமேபால்மதிக்கு பத்திலேற
ஆமப்பாஆதிசிவன் தெருவுதோறும்
அரகராஜயமெடுத் துண்ணாரப்பா
ஊமப்பாஉத்தமனா யிருந்தபுரூரன்
உள்ளபடியறுப்புண்டான் வினையினாலே
வேமப்பாவேந்தனுட ராசிகூர்ந்து
விளம்புவாய்புவியோர்க்கு வினையைத்தானே. 192



### மேற்படி 12-ல் வந்ந பலன்

தானென்றசந்திரனும் வியத்திலேற
தவத்தாலேவந்ததொரு இலங்கைவேந்தன்
கோனென்றஇராமன்கை அம்பால்மாண்டான்
குவலயத்தில்சென்மனுக்கு கொடுமைமெத்த
மானென்றமறலிபயம் பொருளுஞ்சேதம்
மைந்தனேஅரிட்டங்கள் வந்துகூடும்
ஊனென்றபோகருட கடாக்ஷத்தாலே
உத்தமனேபுலிப்பாணி உரைத்தேன்காணே. 193

### நீசபங்க ராஜயோகம்

சூடப்பாஇன்னமொரு சூட்சங்கேளு
சுகமுள்ளஜென்மனுட ராசிதன்னில்
மாடப்பாமதிமயங்கி ஒளியில்லாமல்
மகத்தானகோளதுதா னீசமேற
கூடப்பாகுடினாத னம்புவிக்கு
கொற்றவனேகேந்திரமு முச்சமாக
நாடப்பாபோகருட கடாக்ஷத்தாலே
நலமாகசெப்பிடுவாய் நீசம்போச்சே. 194

### இதுவுமது

போச்சப்பாஇன்னமொரு பேச்சுகேளு
புகழ்பெரியநீசபங்க ராஜயோகம்
நீச்சப்பாநீனிலத்தில் ஜென்மனுக்கு
நிகழ்த்திவிட்டோம்நிலைசமய மறிந்துசெப்பு
கூச்சப்பாகொடியோர்கள் கண்ணுற்றாலும்
குற்றம்வந்துதீருமடா குழவிக்கேதான்
வீச்சப்பாபோகருட கருணையாலே
விளம்பினேன்புலிப்பாணி வினையைக்கேளே. 195

### திசாபுத்தி பலன்

இணங்கினேனின்னமொன்று இயம்பக்கேளு
இரவிமுதலொன்பதுகோள் திசையில்தானும்
சுணங்கினேன்சுயபுத்தியில் பலனைத்தாரார்
சுகமளிப்பர்இருநால்வர் பேர்களுந்தான்

அணங்கினேன் அவரவர்கள் சமயங்கூர்ந்து
அப்பனேசுவாமியுட செயலைப்பாரு
துணங்கினேன்போகருட கடாக்ஷத்தாலே
குற்றமிலேப்புலிப்பாணி கூறினேனே. 196

## சூரிய திசை

கூறப்பாகதிருக்கு வருஷம்ஆறு
குணமுள்ளபுத்திநாள் நூத்தெட்டாகும்
பாரப்பா அக்கினியால் பீடையுண்டு
பாங்கானஅபமிருத்துப் பொருளுஞ்சேதம்
ஆரப்பா அறிவார்கள் பிதாமிருத்தியு
அரிதானவாணிபஞ்செ யாகாதுநஷ்டம்
கோளப்பாகண்ணோவாங் கனலேமீரும்
கொடுமையுள்ளநாளென்று கூறினோமே. 197

கூறினோம்ரவிதிசையில் சந்திரபுத்தி
குணமானமாதமது ஆறதாகும்
தேறினோம்அதன்பலனை செப்பக்கேளு
தீங்கில்லாதனலாபம் சம்பத்துண்டாம்
ஆறினோம்வந்தபிணி தீரும்ரோகம்
அரசரால்மகிழ்ச்சியது தானுண்டாகும்
தேறினோம்ரவிச்சந்திரன் பொசித்தநாளில்
தீங்கிலாநாளென்று தெளிந்துகாணே. 198

காணவேரவிதிசையில் செவ்வாய்புத்தி
கனதையுள்ளநாளதுவும் நூத்திருபத்தாறும்
தோணவேஅதின்பலனைச் சொல்லக்கேளு
சொல்பெரியபூமிதளம் செல்வமாடும்
நாணவேநடைகாலி நன்றுய்ச்சேரும்
நன்மையுடன்நவதானியம் விளைவுமாகும்
பூணவேபூபாலன் செவ்வாய்தானும்
புகழ்ந்துமணைவீடகத்தில் வாழலாமே. 199

ஆமென்றரவிதிசையில் ராகுபுத்தி
ஆகாதமாதம்பத்து நாள்மூவெட்டாகும்
போமென்றஅதின்பலனை புகழக்கேளு
பொன்னோடுபெண்ணதுவும் நாசமாகும்



நாமென்றசத்துருவால் சண்டையுண்டாம்
நலமில்லாவியாதியது பீடிப்பாகும்
தாமென்றமனைவியரை பிரித்துவைக்கும்
தகமையில்லாநாளென்று தணிந்துநில்லே. 200

நில்லென்றரவிதிசையில் வியாழன்புத்தி
நேர்மையுள்ளநாளதுவும் இருநூத்திஎண்பத்தெட்டு
வில்லென்றஅதின்பலனை விரித்துச்சொல்வோம்
விபரமாய்சம்பத்தும் தனதானியமுண்டாம்
சொல்லொன்றும்தவருது வினையகலும்பாரு
சொல்லப்பாநான் இன்பமெய்து வாழலாகும்
பல்லென்றபுத்திரனும் ஆகும்பாரு
பொல்லாதசத்துருவும் வணங்குந்தானே. 201

வணங்குவார்ரவிதிசையில் சனிபுத்திகேளு
வாக்கிலாநாளதுவும் மாதம்பதினொன்று
இணங்குவார்நாளதுவும் முன்னுன்காகும்
இதினுடையபவத்தையினி இயம்பக்கேளு
குணங்குவார்சத்துருவும் மன்னவருந்தானும்
குலேபொருளுஞ்சேதமே ஆக்கிவைப்பார்
பிணங்குவார்பிதிரருமா ரகமேயாவர்
பிலன்கேடுபண்ணிவைப்பான் சனியன்தானே. 202

தானென்றரவிதிசையில் புதனுர்புத்தி
சாதகமாம்மாதம்பத்து நாளாருகும்
ஆனென்றஅதின்பலனை அரையக்கேளு
அடங்காதுவியாதிவந்து பின்னிக்கொல்லும்
வானென்றவான்பொருளும் சேதமாகும்
வாகுடையபுத்திமதி நாசமாகும்
கோனென்றகுடிகேடு பண்ணிவைக்கும்
கொடுமையுள்ளநாள்தனிலே குடிகேடாமே. 203

ஆமென்றரவிதிசையில் கேதுபுத்தி
ஆகாதநாளதுவும் நூற்றிருபத்தாறு
போமென்றஅதன்பலனை புகலக்கேளு
பொருந்துகின்றகாரியங்கள் சேதமாகும்

நாமென்றமனைவிதன்னை நாசம்பண்ணும்
நலமில்லாசத்துருவும் நல்குவான்பார்
தாமென்றஇருந்தவிடம் விட்டேகவைக்கும்
தரணிதனில்தண்டம்வரும் சார்ந்துகேளே. 204

கேளப்பாரவிதிசையில் சுக்கிரபுத்தி
கெணிதமுள்ளமாதமது பனிரண்டாகும்
ஆளப்பாஅதின்பலனை அறையக்கேளு
ஆகாதசூரியுடன் சூஸ்திரவாய்வு
பாளப்பாஆகுமடா திரேகந்தன்னை
பகையதுவுமுண்டாகும் பலனேயில்லை
வாளப்பாமனையாட்டி சிலுக்குண்டாகும்
வகையுடனேவான்பொருளும் கேடாம்சொல்லே. 205

## சந்திரதிசை

சொல்லவேசந்திரதிசை வருஷம்பத்தில்
சுகமுடையசந்திரபுத்தி மாதம்பத்து
நில்லவேயதனுடைய பலனைச்சொல்வோம்
நிகரில்லாமன்னருடன் மகிழ்ச்சியாகும்
சொல்லவேசுயம்வரங்கள் நாட்டிவைத்து
சுகமானகல்யாணம் ஆகும்பாரு
வெல்லவேசத்துருவை ஜெயிக்கலாகும்
வேணபடிநிதிசேரும் விபரந்தானே. 206

தானென்றசந்திரதிசை செவ்வாய்புத்தி
தன்மையில்லாநாளதுவும் மாதம்ஏழு
வானென்றஅதன்பலனைச் சொல்லக்கேளு
வாதமுடன்கிரந்திபித்தம் வாய்வுரோகம்
ஏனென்றகள்ளரால் கோபமுண்டாம்
எளிதானயேந்திழையால் துக்கமுண்டாம்
கோனென்றகோதையரும் சகோதரத்தால்
கொடுமைகளுமுண்டாகும் கூர்ந்துபாரே. 207

பாரப்பாசந்திரதிசை ராகுபுத்தி
பகையானநாளதுவும் மாதம்பதினெட்டாகும்
ஆரப்பாஅதனுடைய பலத்தைக்கேளு
அடங்காதசத்துருவால் தனநஷ்டமாகும்



வீரப்பாவியாதியது பீடிப்பாகும்
விதியளவும்புத்திமதி பண்ணும்
காரப்பாகளருடனே காலிசாவாம்
கனகமதுசிலவாகும் கண்டுதேறே. 208

தேறவேசந்திரதிசை வியாழபுத்தி
தீங்கில்லாமாதமது பதினாறும்
கூறவேயிருந்தபலன் தன்னைக்கேளு
குணமுடையமாதர்களும் சோபனமேயுண்டாம்
சேரவேசெட்டுடனே லாபமுண்டாம்
செந்நெல்முதல்விளைவாகுஞ் செல்வம்சேரும்
வீரவேவியாதியது நிவர்த்தியாகும்
வீரானமணியமுடன் வினையகலும்பாரே. 209

பாரப்பாசந்திரதிசை சனியன்புத்தி
பகர்ந்தநாள்மாதமது பத்தொன்பதாகும்
நேரப்பாஅதனுடைய பலத்தைச்சொல்வோம்
நேரிழையாள்மரணமதாம் நெஞ்சுதனில்நோவாம்
காரப்பாகனகமது சிலவேயாகும்
கள்ளரால்சோரர்பயம் துக்கமுண்டாம்
சாரப்பாசத்துருவால் இடஞ்சலுண்டாம்
சஞ்சலங்களுண்டாகும் தவமேபாழாம் 210

பாவில்லாசந்திரதிசை சனியன்புத்தி
பகரும்நாள்மாதமது பதினேழாமே
கோளில்லாஅதன்பலத்தை கூர்ந்துசொல்வோம்
குணமுள்ளமாதர்களும் மனமகிழ்ச்சியுண்டாம்
நாளில்லாகலியாணம் நடக்கும்பாரு
நன்றானபாக்கியமும் நவதானியஞ்சேரும்
தேளில்லாசத்துருவை செயிக்கலாகும்
தெரிவையர்கள்மோகமுடன் தெளிந்துநிற்பான். 211

தெரிந்துநின்றசந்திரதிசை கேதுபுத்தி
தென்மையில்லாநாளதுவும் மாதம்ஏழு
புரிந்துகொண்டஅதன்பலனைப் புகழக்கேளு
புகழ்பெத்தமார்பில்சில பிணியுமுண்டாம்

பரிந்துகொண்டபாவையரும் பகைநாசமுண்டாம்
பாங்கானதாய்தந்தை சுதன்மரணமாகும்
விரிந்துகொண்டவியாதியது விழலாய்ப்பண்ணும்
வீணாகதேசமெங்கும் அலைவன்பாரே. 212

கேளப்பாசந்திரதிசை சுக்கிரபுத்தி
கெணிதமுள்ளநாளதுவு மாதம்நாலைந்து
ஆளப்பா அதின்பலனை சொல்லக்கேளு
அன்பானலட்சுமியு மனுதினமுநிற்பாள்
வாளப்பாவாகனமும் பொன்முத்துசேரும்
வகையானபூஷணமும் மிகுதியுண்டாம்
கேளப்பாகலியாணங் கெணிதமுடன் நடக்கும்
கெந்தமுடன்சுகந்தங்கள் அணிவான்பாரே. 213

மானேகேள்சந்திரதிசை சூரியபுத்தி
மரணநாள்மாதமது ஆறதாகும்
தானேதான்சத்துருவும் அக்கினியின்பயமும்
தாபமுள்ளசுரதோஷம் சன்னிதோஷம்
ஏனேதான்காணுமடா யிருக்கமதுவுண்டாம்
ஏகாந்தம்தேகமது இருளதுவேயடையும்
தேனேகேள்லட்சுமியும் தேசுமுடன்போவள்.
திரவியங்கள்சேதமடா சிலவுடனேதீதாம். 214

## செவ்வாய் மகாதிசை

ஆமென்றசெய்திசை வருஷம்ஏழில்
அங்காரகன்புத்திநாள் நூற்றிநாற்பத்திஏழு
போமென்றஅதின்பலனை புகலக்கேளு
புகழானஅரசர்பகை ஆயுதத்தால்பீடை
தாமென்றசத்துருவால் வியாதியதுகாணும்
தனச்சேதம்உடல்சேதம் தானேஉண்டாம்
நாமென்றநகரத்தில் சூனியங்களுண்டாம்
நாடெலாம்தீதாகும் நன்மையில்லாப்பகையே. 215

பகையானசெய்திசை ராகுபுத்தி
பாங்கில்லாநாளதுவும் வருஷம்ஒன்று
துகையில்லாநாளதுவும் பதினெட்டாகும்
துன்பங்கள்சுரதோஷம் வாதபீடை



வகையில்லாசத்துருவும் அக்கினியுமுண்டாம்
வளங்கொடியாள்விரோதமது வகையுடனேகாட்டும்
நகையுடனேபூஷணங்கள் நலமில்லாசிலவாம்
நன்மையில்லாநிலைவிட்டு நடப்பாள்காணே. 216

காணவேசெய்திசை வியாழபுத்தி
கனமானநாளதுவு மாதம்பதினொன்று
நாணவேநாளதுவும் ஆறதாகும்
நன்றாகஅதின்பலனை நவிலக்கேளு
பூணவேபூவையரும் பொருந்தியிருப்பாள்
புகழானசிலவுடனே சிறப்புண்டாகும்
தோணவேசத்துருவும் வணக்கமாவான்
தொடுத்ததொருகாரியங்கள் வெற்றியாமே. 217

வெற்றியில்லாசெய்திசை சனியன்புத்தி
வீருனநாளதுவும் மாதம்பதிமூன்று
சத்தியில்லாநாளதுவும் ஒன்பதாகும்
சுகமில்லைஅதின்பலனை சூட்டக்கேளு
புத்தியில்லாசத்துருவும் ரோகபயமுண்டாம்
பூவையரும்புத்திரரும் புனிதமுடன்மடிவாம்
தத்தியில்லாதரக்கங்கள் மெத்தவுண்டுபாரு
கனதையுள்ளசூனியமும் கனவுடனேகாணும். 218

காணவேசெய்திசையில் புதனர்புத்தி
கணக்கானநாளதுவும் மாதம்பதினொன்று
பூணவேநாளதுவும் மூணொன்பதாகும்
பூட்டானஅதின்பலனை புகலக்கேளு
பேணவேஓடிவந்த பிரமியமும்
பெரிதானநீரிழிவும் பிறன்கேடுபண்ணும்
தோணவேதோகையரும் வியாதியாவாள்
தொடுத்ததொருகாரியங்கள் பொல்லாப்பாமே. 219

ஆகுமேசெவ்வாயில் கேதுபுத்தி
ஆகாதநாளதுவும் நூற்றிருபத்தியேழு
போதவேபலன்தனை பூட்டக்கேளு
பூவையரும்புத்திரரும் வியாதியாகும்
ஏகுமேவியாதியது கூடிக்கொல்லும்
இன்பமுள்ளயினவிரோதம் தானுமுண்டாம்

சாகுமேசத்துருவும் பிசாசுதானும்
சஞ்சலங்களதினலே கோடிதானே. 220

தானென்றசெய்திசையில் சுக்கிரன்புத்தி
தாழ்வானமாதமது பதினலாகும்
வீனென்றஅதின்பலனை வினவக்கேளு
விரசாவுசத்துருவால் விலங்குமுண்டாம்
ஏனென்றயீனஸ்திரீ போகமுண்டாம்
இன்பமில்லாதுன்பமது இடஞ்சல்காட்டும்
கோனென்றஇராஜாவால் கலகமுண்டு
கோதண்டம்தான்வருகும் கொடுமைபாரே. 221

பாரப்பாசெவ்வாயில் சூரியபுத்தி
பாங்கானநாளதுவும் நூற்றிருபத்தியாறு
ஆரப்பாஅதின்பலனை அறையக்கேளு
ஆனதொருசம்பத்து ஐஸ்வரியமுண்டாம்
சாரப்பாசத்துருவும் உறவாகிப்போவான்
சஞ்சலங்கள்தானகலும் சம்பத்துண்டாம்
சேரப்பாசிவதலங்கள் சேரப்பண்ணும்
தீங்கில்லாசிவவேடம் பூணுவானே. 222

பூணுவான்செவ்வாயில் சந்திரபுத்தி
புகழானநாளதுவும் மாதம்யேழு
ஆணுவான்அதின்பலனை அன்பாய்கேளு
ஆயிழையாளருகிருந்து செல்வபதியாவாள்
கோணுவான்கொடியோர்கள் வணக்கஞ்செய்வார்
கொற்றவனேகுவலயத்தில் பேர்விளங்கும்
ஊணுவான்தோகையரும் புத்திரருமுண்டாம்
உத்ததொருகுலதெய்வம் உறுதிகாணே. 223

## இராகு மகாதிசை

கர்ணவேராகுதிசை வருஷம்பதினெட்டு
கனதையுள்ளராகுவினில் ராகுபுத்தி
தோணவேமாதமது முப்பத்திரெண்டு
துகையானநாளதுவும் பனிரெண்டாகும்
ஏனவேசத்துருவால் நிபந்தனையோடும்
எண்ணமுள்ளமனைவியரும் இருந்தவிடம்பாழாம்
போனவேபழம்பொருளும் சேதமாகும்
பெலமானநோயதுவும் கூடிக்கொல்லும். 224



கூடியேராகுதிசை வியாழபுத்தி
குணமுள்ளமாதமது யிருபத்தெட்டும்
நாடியேநாளதுவும் மூவெட்டாகும்
நலமுள்ளராசரால் நன்மையுடன்வாழ்வன்
தேடியேதெரிவையரும் சோபனமேயாகும்
தெவிட்டாதபுத்திரனும் தென்புடனேவாழ்வன்
பாடியேபாக்கியமும் பவுசுகளுண்டாம்
பலன்தரும்பூமிமுதல் யோகந்தானே. 225

தானென்றராகுதிசை சனிபுத்திகேளு
தன்மையில்லாமாதமது முப்பத்திஞலு
நானென்றநாளதுவும் ஆறதாகும்
நலமில்லாபிரமைகொண்டு நாடுநகர்திரிவன்
கோனென்றபிதிர்பீடையுண் டாகும்பாரு
கொடியிடையாள்நோவாகும் குழந்தையதுசாவாம்
தேனென்றதேவதையின் இடஞ்சலுண்டாம்
தெண்டமுடன்சத்துருவும் திரவியங்கள்சேரும். 226

சேதமில்லாராகுதிசை புதனர்புத்தி
செப்புநாள்மாதமது முப்பதாகும்
பாதமில்லாநாளதுதான் பதினெட்டாகும்
பகுத்தறியும்அதின்பலனை பகரக்கேளு
வாதமில்லாவாணிபஞ்செட் டாகும்பாரு
வகையானசகோதர முடன்வாழலாகும்
பேதமுடன்பொருளுண்டாம் பூமிலாபம்
பொங்குமால்புத்திரனில் புகழ்மிகப்பாரே. 227

பாரேநீராகுதிசை கேதுபுத்தி
பகருகின்றமாதமது பனிரெண்டாகும்
சேரேநீநாளதுவும் பதினெட்டாகும்
செலுத்துகின்றஅதின்பலனை செப்பக்கேளு
ஊரேநீவிரோதமுடன் சத்துருவுமுண்டாம்
உடன்கேடுபண்ணிவைக்கும் உண்மைபாரு
தேரேநீதிரவியங்கள் யேவலுடன்சேதம்
தீதானகாரியங்கள் தேகத்தில்காணும். 228

காணவேராகுதிசை சுக்கிரபுத்தி
கணக்கானமாதமது ஆருருகும்

தோணவேஅதின்பலனை சொல்லக்கேளு
தோகையர்கள் தன்னாலே சுகமாகும்பாரு
பூணவேபூமிமுதல் பொருளுஞ்சேதம்
புகழ்பெற்றஅரசரால் சந்தோஷமாகும்
ஊணவேவியாதியது பீடிப்பாகும்
உடன்கேடுவந்ததனால் கலகமாமே. 229

ஆகுமேராகுதிசை சூரியபுத்தி
அருளில்லாமாதமது பத்தேயாகும்
யேகுமேநாளதுவும் மூவெட்டாகும்
யென்னசொல்வேனதின்பலனை யியம்பக்கேளு
போகுமேசத்துருவால் வியாதிகாணும்
பொருள்சிலவுபூமிமுதல் சேதமாகும்
சாகுமேநாள்தோறும் சண்டையாலே
சதிரானபூமிமுதல் காலிபோமே. 230

காலியென்றராகுதிசை சந்திரபுத்தி
கனமில்லாமாதமது ஈரொன்பதாகும்
வேலியென்ற அதின்பலனை விளம்பக்கேளு
விதமில்லாமனைவிதன்னால் பொருளுஞ்சேதம்
வாலியென்றகுரங்கதுபோல் மாண்டுபோவான்
வகையானதேசம்விட்டு அலைவன்பாரு
மாலியென்றமனைவியால் சுகபோகமில்லை
மக்கள்முதல்மாடுடன் கேடாங்கேளே. 231

கேளப்பாராகுதிசை செவ்வாய்புத்தி
கேடானநாளதுவும் வருஷம்ஒன்று
நாளப்பாநாளதுவும் பதினெட்டாகும்
நன்மையில்லாஅதின்பலனை நவிலக்கேளு
ஆளப்பா அக்கினியும் சோரபயமுண்டாம்
அடிபணியும்தேவதையால் அவதியுண்டாம்
பாளப்பாபாவையரும் பலனுந்தீதாம்
பாழாகும்பொருள்சிலவும் பலவிதமுந்தானே. 232

## வியாழமகாதிசை பலன்

தானென்றவியாழதிசை ஒருபத்தாறு
தன்மையுடனதின்புத்தி வருஷம்ரெண்டு
நானென்றநாளதுவும் நாற்பத்தெட்டு
நன்றாகஅதின்பலனை நவிலக்கேளு
கோனென்றராசாவும் குருவருளுமுண்டு
குறைவில்லாதிரவியங்கள் வெகுலாபமுண்டாம்
ஆனென்றபெண்கொடியாள் மனமகிழ்ச்சியுண்டாம்
மங்களமும்சோபனமும் வளருங்கலியாணம். 233



வளருமென்றவியாழதிசை சனியின்புத்தி
வாகானமாதமது முப்பதுவேயாகும்
வளருமென்றநாளதுவும் பனிரெண்டாகும்
வண்மையுடன் அதின்பலனை வழுத்தக்கேளு
வளருமென்றகர்ப்பமுடன் போகசித்தி
வகையுடனேதிரவியமும் பூஷணமுஞ்சேரும்
வளருமென்றமன்னன்போல் வளருமதுயோகம்
வாகானதண்டிகையும் வாகனமுண்டாம். 234

உண்டாகும்வியாழதிசை புதனார்புத்தி
உண்மையுள்ளமாதமது யீரொன்பதாகும்
தென்றாகும்நாளதுவும் ஆறதாகும்
தெவிட்டாதஅதின்பலனை தென்புடனேகேளு
உண்டாகுமலைபோலே பெருகுஞ்செல்வம்
குறைவில்லாமாதர்மைந்தர் கட்டுடனேவாழ்வன்
சென்றாகும்திருவுடனே பட்டங்கட்டும்
திருவானலெட்சுமியும் சேர்வன்பாரே. 235

பாரப்பாவியாழதிசை கேதுபுத்தி
பாழாகும்மாதமது பதினொன்றாகும்
சேரப்பாநாளதுவும் ஆறதாகும்
செம்மையில்லாஅதன்பலனை செப்பக்கேளு
வீரப்பாவியாதியது கூடிக்கொல்லும்
விதமில்லாமனைவிதன்னால் நிலைவிட்டுப்போவான்
சாரப்பாசத்துருவும் சதஞ்செய்யவருவான்
சகலசனபாக்கியமும் க்ஷணத்தில்போமே. 236

போமென்றவியாழதிசை சுக்கிரபுத்தி
பொருள்காணுமாதமது முப்பத்திரண்டு
ஆமென்றஅதின்பலனைச் சொல்லக்கேளு.
அருளானலெட்சுமியும் அன்புடனேசேர்வாள்

சுபமென்றசோபனமும் மனமகிழ்ச்சியுண்டாம்
சுகமானகன்னியுடன் சுகமுடனேவாழ்வன்
நாமென்றநாடுநகர் கைவசமேயாகும்
நன்றாகஅவனிதனில் நன்மையுடன்வாழ்வான். 237

வாமென்றவியாழதிசை சூரியபுத்தி
வகையுடையமாதமது ஒன்பதாகும்
தாமென்றநாளதுவும் பதினெட்டாகும்
தன்மையுடன் அதின்பலனை சாற்றக்கேளு
பரமென்றபரதேசி யாகிப்போவான்
பாங்கானமடபதியில் பரமகுருஆவான்
ஞானமென்றபதியில்நின்று யோகநிலையை
ஞாபகத்தில்சிவனடியை மறவான்காணே. 238

காணவேவியாழதிசை சுக்கிரபுத்தி
கனமுள்ளமாதமது பதினாறாகும்
தோணவேஅதின்பலனை சொல்லக்கேளு
சுகமுடையகலியாணம் சோபனங்களுண்டாம்
பேணவேசிவிகைமுத்து வெண்குடையுமுண்டாம்
பெரிதானராசாவால் பெருஞ்செல்வமுண்டாம்
பூணவேதாய்தந்தை மனைவியுடன்புத்திரன்
புகழுடன்வாழ்ந்திருப்பன் பூலோகந்தன்னில். 239

தன்னிலேவியாழதிசை செவ்வாய்புத்தி
தன்மையில்லாமாதமது பதினொன்றாகும்
விண்ணிலேநாளதுவும் ஆறதாகும்
மாறானபலனதுவை விளம்பக்கேளு
புண்ணிலேஅக்கினியால் வியாதிகாணும்
பூமியினால்வினைவுகுன்றும் மாடாடுசாகும்
விண்ணிலேபோனாலும் சத்துருவுண்டு
வீணானவிலங்கதுவும் விதிவசமேயாகும். 240

ஆகுமேவியாழதிசை ராகுபுத்தி
அருளில்லாமாதமது யிருபத்தெட்டு
போகுமேநாளதுவு மூவெட்டாகும்
பொல்லாதஅதின்பலனை புகழக்கேளு



வாகுமேவியாதியது பீடிப்பாகும்
மனைவியரும்புத்திரரும் மாண்டுபோகும்
ஏகுமேசத்துருவும் இடஞ்சலுண்டாம்
இதங்கேடுபண்ணிவைக்கும்யிம்மையுடன்கேளே. 241

## சனிமகாதிசை பலன்

கேளப்பாசனிதிசையில் மார்க்கங்கேளு
கெடியானவருஷமது பத்தொன்பதாகும்
கேளப்பாசனிபுத்தி வருஷம்மூன்று
கேடானநாளதுவும் மூன்றதாகும்
பாளப்பாபாவையரும் பாலன்தானும்
பாங்கானவருஷம்ஒன்றில் சாவதாகும்
ஆளப்பா அலைச்சலது மெத்தவுண்டாம்
அளவில்லாதனச்சேத மாகுந்தானே. 242

தானென்றகாரிதிசை புதன்புத்திகேளு
தன்மையுள்ளமாதமது நாலெட்டாகும்
நானென்றநாளதுவும் ஒன்பதாகும்
நன்றாகஅதின்பலனை நவிலக்கேளும்
மானென்றமன்னரால் மகிழ்ச்சியுண்டாம்
மாதர்முதல்பந்துக்களும் மகிழ்ச்சியாகும்
வானென்றஞானமுடன் யோகமார்க்கம்
வளர்கின்றகர்ப்பமுதல் தேகசித்தியாமே. 243

ஆமென்றகாரிதிசை கேதுபுத்தி
அருளில்லாமாதமது பதின்மூன்றாகும்
போமென்றநாளதுவும் ஒன்பதாகும்
புகழில்லாஅதின்பலனை புகலக்கேளு
தாமென்றதலைவலியும் கண்ரோகமாகும்
தப்பாதுபாண்டுவுடன் தனப்பொருளுஞ்சேதம்
நாமென்றசத்துருவால் முத்தண்டமுண்டாம்
நன்மையுள்ளமாதரால் கெர்ப்பமதுபாழாம். 244

பாளில்லாகாரிதிசை சுக்கிரபுத்தி
பாங்கானமாதமது முப்பத்தியெட்டு
நாளில்லாமங்கையரும் மனமாட்சியுமாம்
நன்றானபெருஞ்செல்வம் நாலதிலேயுண்டாம்

ஆளில்லாஅரசனுடன் அனுதினமும்வாழ்வன்
அணைகட்டுவிரக்கமுடன் அலங்காரமுண்டாம்
கோளில்லாசத்துருநோய் இல்லையதுபாரு
கோகனகமாதுசெல்வம் கொடுப்பாள்தானே. 245

தானென்றகாரிதிசை கதிரோன்புத்தி
தயவில்லாமாதமது பதினொன்றாகும்
நானென்றநாளதுவும் பனிரண்டாகும்
நன்மையில்லாஅதன்பலனை நவிலக்கேளு
ஊனென்றசுரபீடை இரத்தமேரும்
உதிரத்தால்சூலைநோய் உடனேகாணும்
மானென்றமனைவியரும் மக்கள்தானும்
மயங்குகின்றநோவதினால் வருத்தங்காணே. 246

காணவேகாரிதிசை சந்திரபுத்தி
கனமில்லாமாதமது பத்தொன்பதாகும்
தோணவேஅதன்பதனை சொல்லக்கேளு
தோகையருஞ்சண்டையதால் துன்பம்வருங்கேடு
பூணவேபூமிமுதல் பூணாரங்கள்
புகன்றதொருதனமுதல் சேதமாகும்
ஆணவேஅலைச்சலது உண்டாகும்பாரு
அளவில்லாபேயதுவுங் கூடிக்கொல்லும். 247

கூடியேகாரிதிசை செவ்வாய்புத்தி
குணமில்லாமாதமது பதிமூன்றதாகும்
தேடியேநாளதுவும் ஒன்பதாகும்
சேதமுள்ளஅதன்பலனைச் சொல்லக்கேளு.
பாடியேபாவையரும் வகைநாசமாகும்
பண்புடனேசத்துருவும் தனச்சேதம்பண்ணும்
வாடியேஅலைந்திடுவாய் தேசமெங்கும்
வாகானதேவதையால் பிசகுண்டாமே. 248

உண்டாகும்காரிதிசை ராகுபுத்தி
உருதியில்லாமாதமது முப்பத்திநாலு
கொண்டாகும்நாளதுவும் ஆறதாகும்
கொடுமையுள்ளஅதன்பலனை குறித்துச்சொல்வோம்.



விண்டானவியாதியுடன் வாந்திகாணும்
விதமானசரீரமதில் மேகரணமுண்டாம்
துண்டாகும்சரீரமது யிருபிளவாய்போகும்
துன்பமுள்ளநாள தனில்சாவாம். 249

சாவில்லாகாரிதிசை வியாழபுத்தி
சமானமுள்ளமாதமது முப்பதாகும்
நாளில்லாநாளதுவும் பன்னிரெண்டாகும்
நன்மையுள்ளஅதன்பலனை நவிலுவோம்கேள்
மாயில்லாமங்கையரும் மணமுடனேவருவாள்
மார்க்கமுள்ளபழம்பொருளும் வகையுடனேவரும்
காயில்லாகனகமது கண்டெடுப்பான்பாரு
கனதையுள்ளசத்துருவும் காலடியில்வீழ்வான். 250

## புதன் மகாதிசை

அடியில்நின்றபுதன்திசைதான் வருஷம்பதினேழு
அதினுடையபுத்தியது மாதம்நாலேழ்
முடியில்நின்றநாளதுவும் மூவொன்பதாகும்
மூர்க்கமுள்ளஅதன்பலனைக் கூறக்கேளு
படியில்நின்றபழம்பொருளும் பாவையருஞ்சேருவள்
பாங்கானசோபனமும் பாங்குடனேகாணும்
குடியில்நின்றகுலதெய்வங் குணமுடனேசேரும்
குடும்பத்தில்புத்திரனுங் குணமுடனேவாழ்வான். 251

வாழலாம்புதன்திசையில் கேதுபுத்தி
வகையில்லாமாதமது பதினொன்றாகும்
குள்ளலாம்நாளதுவும் இருபத்தியேழு
கொடுமையுள்ளஅதன்பலனை கூறக்கேளு
மாளலாம்பகைவரும் உத்தார்நாசம்
மணமில்லாவியாதியது மடிந்துக்கொல்லும்
தேடலாம்திரவியங்கள் சேதமாகும்
தினந்தோறும்சத்துருவும் நீதான்பாரே. 252

பாரப்பாபுதன்திசையில் சுக்கிரபுத்தி
பாங்குள்ளமாதமது முப்பத்திநாலு
சேரப்பா அதின்பலனை செப்பக்கேளு
தேவதையால்தர்க்கமது தீதாம்பாரு

ஆரப்பாமனைவியுடன் புத்திரனும்
அனுதினமும்வாழ்ந்திருப்பன் அலங்காரமுடன்
காரப்பாகனகமது கனசம்பத்துண்டாம்
கனமானராசாவால் கடாட்சமுண்டாங்கேளே. 253

கேளப்பாபுதன்திசையில் சூரியபுத்தி
கெணிதமுள்ளநாளதுவும் மாதம்பத்து
ஆளப்பா அதன்பலனை அறையக்கேளு
ஆதிகுருதலஞ்சிவ பதங்களுள்ளாம்
காணப்பாகாவியது வேஷ்டியுண்டு
காசினியில்பரதேசி ஆகிப்போவான்
வாளப்பாமடபதியி லிருந்துக்கொண்டு
மனையாட்டிதன்னுடனே வாழ்ந்திருப்பான்தானே.254

தானேதான்புதன்திசையில் சந்திரபுத்தி
தாழ்வானமாதமது பதினைந்தாகும்
தேனென்றஅதின்பலனை சொல்லக்கேளு
தெரிவையர்கள்கலகமுடன் யிளப்பசயரோகம்
கோனென்றராசாவால் குடிக்கேடுசெய்யும்
கோதையர்கள்தன்னுலே குடிபாழாகும்
வானென்றவான்பொருளும் வகையில்லாச்சேதம்
வையகத்தில்நீதியில்லா மாதரைச்சேர்வாயே. 255

சேரலாம்புதன்திசையில் செவ்வாய்புத்தி
செயமில்லாமாதம் பதினொன்ருகும்
தேறலாம்நாளதுவும் இருபத்தேழில்
தெரிவையர்கள்தன்னுலே கிரந்தியதுநோவாம்
மாறலாம்சத்துருவால் மயக்கமுடன்பேயும்
மனதானசகோதரமும் அதினுல்சேதம்
பாரலாம்பலநிதியுங் கெடுதிகாணும்
பணமுடையபூமிமுதல் பலனுந்தீதாம். 256

பலனில்லாபுதன்திசையில் ராகுபுத்தி
பாழானமாதமது முப்பதாகும்
நலமில்லாநாளதுவும் பதினெட்டாகும்
நன்ருகஅதன்பலனை நவிலக்கேளு



பலமில்லாபிணிகளுடன் மயக்கம்சேதம்
பிரட்டானசத்துருவால் பேதையர்கள்யாவும்
நலமில்லாவியாதியினுல் நற்பொருளுஞ்சேதம்
நன்ருனவீடுமுதல் பூமிநிதிபோமே. 257

போமென்றபுதன்திசையின் வியாழபுத்தி
புகழுள்ளமாதமது யிருபத்தேழு
நாமொன்றுநாளதுவும் ஆறுதாகும்
நன்ருகவதின்பலனை நவிலக்கேளு
தாமென்றசத்துருநோய் பயமும்போகும்
சகலசம்பத்துண்டாகும் தாணில்வாழ்வன்
ஓமென்றயோகமது கைக்குள்சிக்கும்
யேகமாம்புத்திரனும் இதிலுண்டாமே. 258

பாரப்பாபுதன்திசையில் சனியின்புத்தி
பாழானமாதமது முப்பத்திரண்டு
சேரப்பாநாளதுவும் ஒன்பதாகும்
செலுத்துகிறபலனதுவை செப்பக்கேளு
வீரப்பாசத்துருவால் சூனியமுண்டாம்
விதமில்லாநோய்போலே விதங்கேடுபண்ணும்
மாரப்பாமனைவியரும் புத்திரரும்தானும்
மரணமாம்உன்னுடலு மரணமாமே. 259

## கேது மகாதிசை

ஆமென்றகேதுதிசை வருஷம்யேழு
அதினுடையபுத்திநாள் நூற்றிநாற்பத்தியேழு
போமென்றஅதின்பலனை புகழக்கேளு
புகழானஅரசர்படை ஆயுதத்தால்பீடை
தாமென்றசத்துருவால் வியாதிகாணும்
தனச்சேதம்உடல்சேதம் தானேஉண்டாம்
நாமென்றநகரத்தில் சூனியங்களுண்டாம்
நாடெல்லாம்தீதாகும் நன்மையில்லாப்பகையே. 260

பகையானகேதுதிசை சுக்கிரபுத்தி
பாங்கில்லாமாதமது பதினாலாகும்
தகையானஅதின்பலனை சாற்றக்கேளு
தாழ்வில்லாசத்துருவால் விலங்குண்டாகும்

நகையானபூஷணங்கள் சிலவதாகும்
நாரிழையாள் தன்னுடனே அபமிருத்துகாணும்
வகையானராசாவால் மனமகிழ்ச்சியாகி
மனைவிமக்கள் தன்னுடனே வாழ்வன்காணே. 261

பாரப்பாகேதுதிசை சூரியபுத்தி
பாங்கானநாளதுவும் நூத்திஇருபத்திஆறு
பாரப்பா அதன்பலனைச் சொல்லக்கேளு
ஆகாதசத்துருவால் அக்கினியும்பேயும்
சேரப்பாசேர்ந்துமே கூடிக்கொல்லும்
சேர்ந்துநின்றதந்தைகுரு மாணமாகும்
வீரப்பாவீண்சிலவு மிகவேயாகும்
வீடுவிட்டுகாஷாயம் பூணுவானே. 262

பூணுவான்கேதுதிசை சந்திரபுத்தி
புகழானமாதமது நாலுமூணும்
ஆணுவான் அதன்பலனை அறையக்கேளு
ஆயிழையாள்விலகிநிற்பள் அற்பமாகும்
தோணுவான்தோகையரும் புத்திரரும்பாழாம்
தொகுதியுடன் பொருளதுவுஞ்சேதமாகும்
நாணுவான் நாரிகையும் சலத்தில்வீழ்ந்து
நன்ருகமடிந்திடுவாள் நலமில்லைதானே. 263

தானென்றகேதுதிசை செவ்வாய்புத்தி
தாழ்வானநாளதுவும் நூத்தியிருபத்துயேழு
வானென்றஅதின்பலனை வழுத்தக்கேளு
வன்மையுடன் இனசத்துரு தானேஉண்டாம்
கோனென்றகோளுநால் குடிகேடாகும்
கோதையரால்குலமதுவு நாசமாகும்
தேனென்றதிரவியமும் சேதமாகும்
தெவிட்டாததுணைதம்பி தீதுண்டாமே. 264

உண்டானகேதுதிசை ராகுபுத்தி
உண்மையில்லாநாளதுவும் வருடம்ஒன்று
நன்ருகும்நாளதுவும் மூவாருகும்
நலமில்லா அதின்பலனை நவிலக்கேளு



விண்டாகுஞ்சத்துருவால் சோரபயமாகும்
வினையானமனைவிதன்னுல் வீண்கலகமாகும்
ஒன்ருகும்உன் உடம்பில் பிணியுண்டாகும்
உறுதியில்லாஉன்தெய்வம் வோடுந்தானே. 265

காணவேகேதுதிசை வியாழபுத்தி
கனமானமாதமது பதினென்ருகும்
தோணவேநாளதுவும் ஆறதாகும்
தொகையானதனங்களும் புத்திரனுலுண்டாம்
பூணவேபூவுடையாள் நிர்த்தனம்செய்வாள்
பூமிதனில்வெகுலாபம் பொருந்திகாணும்
நாணவேராசாங்க யோகம்பெற்று
நன்ருகசகடமது யோகந்தானே. 266

தானென்றகேதுதிசை சனியன்புத்தி
தாழ்வானமாதமது பதிமூன்ருகும்
நானென்றநாளதுவும் ஒன்பதாகும்
நலமில்லா அதன்பலனை நவிலக்கேளு
வானென்றவான்பொருளும் கேடுவாகும்
வகையானமனைவியுடன் மக்களதுவும்போம்
மானென்றபதிமூன்றில் மரணமாவான்
மனக்கவலைரொம்பஉண்டு மாள்வான்பாரே. 267

பாரப்பாகேதுதிசை புதனுர்புத்தி
பாங்குள்ளமாதமது பதினென்ருகும்
சேரப்பாநாளதுவும் இருபத்தேழு
சேதமில்லா அதன்பலனை செப்பக்கேளு
வீரப்பாகொண்டுநின்ற மயக்கம்போய்நீ
மேதினியில்நீயுமொரு மனுஷனுவாய்
சீரப்பாலட்சுமியும் சேர்ந்துகொள்வாள்
தீங்கில்லாமனக்கவலை யில்லைகாணே. 268

## சுக்கிரமகாதிசை

காணவேசுக்கிரதிசை வருஷம்நாலைந்து
கனமானசுக்கிரனில் சுக்கிரன்புத்தி
பூணவேமாதமது நாற்பதாகும்
பூலோகமன்னவரைப்போல் பூவிலரசாள்வான்

பேணவேசவுக்கியங்க ளுண்டாகும்பாரு
பெரிதான்லெட்சுமியும் பொற்கொடிபோல்வருவாள்
தோணவேசோபனமும் சுபயோகமுண்டாம்
தோகையர்கள்வந்தவுடன் தொகுதியுடன்வாழ்வன்.

வாழலாம்சுக்கிர திசை சூரியபுத்தி
வகையில்லாமாதமது பனிரெண்டாகும்
நாளலாம்அதின்பலனை நவிலக்கேளு
நன்மையில்லாசுரபீடை நாய்கடிகளுண்டாம்
கேளலாம்சத்துருவும் குடிகேடுசெய்வான்
குணமானதாய்தந்தை மரணமதுவாகும்
வாழலாம்சித்தமதில் வெகுகலக்கமுண்டாம்
மனைவிதனைவிட்டேகி மலையாண்டியாவன். 270

ஆவானேசுக்கிர திசை சுக்கிரபுத்தி
அருளில்லாமாதமது நாலைந்தாகும்
போவானே அதின்பலனை புகழக்கேளு
பொன்பெறுவாள் அன்னையுமே மரணமாவாள்
சாவானேசம்பத்தும் குறைந்துபோகும்
சதிரானமனையைவிட்டு ஓடிப்போவான்
நோவானேவியாதியது துடர்ந்துகொள்ளும்
நுணுக்கமுள்ளவினைசமயம் நுகருந்தானே. 271

தானென்றசுக்கிர திசை செவ்வாய்புத்தி
தாழ்வானமாதமது பதினாலாகும்
ஏனென்ற அதின்பலனை யியம்பக்கேளு
எலிகடியும்பீனிசமும் இணைப்புமுண்டாம்
வானென்றவயிற்றினிலே நோவுண்டாகும்
வகையுடனேஆசனத்தில் கடுப்புண்டாகும்
தேனென்றதெரிவையர்கள் விகற்பமாகும்
தீதானசத்துருவும் சேர்வான்பாரே. 272

பாரப்பாசுக்கிர திசை ராகுபுத்தி
பகையானமாதமது முப்பதாகும்
சேரப்பா அதின்பலனை செப்பக்கேளு
சிற்றோகம்காமாலை ஜெயமும்நோவாம்



ஆரப்பா அரசர்பகை அபமிருத்துமாமே
அன்பானதாய்தந்தை அடவுடனேசாவாம்
மேரப்பாமேகமதால் ரோகமுண்டாம்
மேலெல்லாம்சிரங்குகுட்டம் ஆவான்பாரே. 273

காணவேசுக்கிர திசை வியாழபுத்தி
கனமானமாதமது முப்பத்திரண்டு
தோணவேஅதின்பலனை சொல்லக்கேளு
தோகையரும்மங்களமும் சுபயோகமாகும்
பேணவேபெருஞ்செல்வமும் பெருகும்பாரு
பெரிதானபுத்திரனும் பெண்களுண்டாகும்
நாணவேநாடுநகரம் உண்டாகும்பாரு
நன்மையுடன்வாகனமும் நடப்புடனேஉண்டாம். 274

உண்டாகும்சுக்கிர திசை சனியன்புத்தி
உண்மையுள்ளமாதமது முப்பத்தெட்டு
தெண்டாடும்தினபலனை சொல்லக்கேளு
திரவியமும்பூமிமுதல் சேரும்பாரு
நன்றாகும்அரசர்பதி யாவாய்பாரு
நன்மையுள்ளமாதர்மைந்தர் நாடுநகர்உண்டாம்
சென்றாகும்செல்வபதி யாவான்பாரு
தீர்க்கமுள்ளமன்னனெனச் செப்பலாமே. 275

ஆமென்றசுக்கிர திசை புதனார்புத்தி
அன்புடையமாதமது முப்பத்திநாலு
நாமென்றதின்பலனை நவிலக்கேளு
நாடுநகர்உன்வசமே ஆகும்பாரு
தானென்றதன்னரசு ஆண்டுநீயும்
தாரணியில்நீயுமொரு தவசியாவாய்
போமென்றபொன்முதலும் பூமியாண்டு
பொங்கமுடன்தானிருந்து அரசு ஆள்வாய். 276

ஆளலாம்சுக்கிரனில் கேதுபுத்தி
ஆகாதமாதமது யீரேழாகும்
வாழலாம்அதின்பலனை வகுத்துச்சொல்வேன்
வளர்கொடியாள்தான்சாவாள்வான்பொருளும்போகும்

தாழ்வான தன்னரசு ராச்சியங்கள்போகும்
சம்பத்துதான்குறையும் தந்தைதாய்மரணம்
கோளலாம்சத்துருவால் குடிகேடாகும்
கோதையரும்தான்போவாள் குடிகேடாமே. 277

ஆமென்றநவக்கிரகந் திசைபுத்திபலனே
அணுஅணுவாய்சொல்லிவிட்டோம் அனுசரித்துப்பாரு
நாமென்றநவக்கிரகந் திசைபுத்திஅந்திரம்
நன்ருனபலனிதிலே நவின்றுவிட்டோம்
தாமென்றகிரகமது ஆட்சியுச்சம்
தப்பாதநட்புநிலை சத்துருநீசம்
போமென்றபகைச்சாரம் பார்த்துநீயும்
பொருளதுபோல் பயனறிந்துபுகலுவாயே. 278

பாடினேனின்னமொன்று பகரக்கேளு
பகலவனுஞ்சனிசெவ்வாய் கொடியோராவர்
தேடினேன்யெட்டாறு பன்னிரண்டும்
திடமானகேந்திரமும் வலுமையப்பா
நாடினேன் நல்லோர்கள் கோணம்நட்பு
நற்பொருளுங்கீர்த்தியுண்டு நலமாய்வாழ்வன்
ஆடினேன் அயன்விதியும் தீர்க்கம்தீர்க்கம்
அப்பனேபுலிப்பாணி அறைந்திட்டேனே. 279

பாரப்பாயின்னமொரு புதுமைகேளு
பாங்கானமலைதனிலே சப்தகோள்கள்
சீரப்பாஜென்மனிடம் பெரியக்காள்தான்
சிறப்பாகவீற்றிருப்பாள் கிரகந்தன்னில்
கூறப்பாகுண்டிதுணி கந்தையாகும்
குவலயத்திலிவனைப்போல் தரித்திரனில்லை
ஆரப்பாயென்னைப்போல் சொன்னாரில்லை
அப்பனேயின்னமொரு புதுமைகேளு. 280

---



## திசாபாக உடற்கூற்று வண்ணம்

சங்கர சங்கர சம்போ—சிவ
சங்கர சங்கர சங்கர சம்போ. (சங்க)

ஒண்ணவனுச்சமுமாகி-மாதே
ஓரைந்தில்முடவனும் வெள்ளியைநோக்க
திண்ணமாயிவனுக்குபுத்திரன் - தீர்க்கம்
திடமாகவியஞ்சொல்லு சொன்னேண்டிதோழி—சங்கர. 281

ஒண்ணவன்சுபனுமேயாகி-மாதே
ஓரெட்டோன்கேந்திரகோணங்களேற
சொன்னேனேஇவனுக்குயோகம்-சுகம்
போகமும்ரோகமும் சுமந்துசொல்தோழி—சங்கர. 282

ஒண்ணவன்விரயத்திலேற-மாதே
ஒன்பதோனுறெட்டி லீராறிலேற
பண்ணவேயிவனுக்குபாக்கியர்-மெத்த
பண்டுபொருளெல்லாம் விரயஞ்சொல்தோழி—சங்கர. 283

ஒண்ணவன்விரயமுமாகி-மாதே
ஒன்பதில்வெள்ளியு மாட்சியுமேற
சொன்னேனேயிவனுக்குவிதவை-தொத்து
கிஞ்சிற்றுஉண்டென்று சொல்லடிதோழி—சங்கர. 284

இரண்டவன்திசையைநீகேளு-அவன்
இரண்டேழிலீரைந்தி லாபமுமேற
பெண்டுபிள்ளைகளுடன் வாழ்வன்-மாதே
சுகமுடன்ஆண்மையும் நீதியும்சொல்தோழி—சங்கர. 285

மூன்றவன்திசையை நீகேளு-மாதே
மூணேழில்மும்மூன்றி லக்கினமேற
நாணயவீரியமுண்டு-நல்ல
போகமும்சேவகம் கலந்துசொல்தோழி—சங்கர. 286

நாலவன்திசையைநீகேளு-மாதே
நாலேழிலாபத்தில் கேந்திரமேற
சீலமாயிவனுக்குகூறு-நல்ல
செந்நெல்வயல்களும் நிதியும்சொல்தோழி—சங்கர. 287

ஐந்தவன்திசையைநீகேளு-மாதே
ஐந்தேழிலீரைந்தி லாபமுமேற
தொந்தமாயிவனுக்கு செப்பு-சுகம்
தென்கீழ்திசைதனில் யோகம்சொல்தோழி—சங்கர. 288

ஆறவன் திசையைநீபாரு-மாதே
ஆறவனேந்தேழி லாபத்திலேறி
சீராககேந்திரம்புக்க-சிறை
காவலும்யோகமும் சிறந்துசொல்தோழி—சங்கர. 289

ஏழவன் திசையைநீகேளு-மாதே
ஏழைந்தில்கேந்திர கோணங்களேற
மார்க்கமாயிவனுக்கு மங்கை-வயதில்
சேர்க்கையும்பூமியும் சேவகம்கூறு—சங்கர. 290

எட்டவன் திசையைநீபாரு-மாதே
எட்டைந்தல்கேந்திர கோணங்களேற
சட்டமாயிவனுக்கு செப்பு-சிறை
காவலும்துன்பமும் யோகம்சொல்தோழி—சங்கர. 291

பாக்கியன் திசையைநீகேளு-மாதே
பாக்கியன்லாபத்தில் கேந்திரமேற
யோக்கியம்பாக்கியமுண்டு நல்ல
போக்கியம்ஆண்மையும் கூடவேசொல்லு—சங்கர. 292

பத்தோன் திசையைநீபாரு-மாதே
பத்தேழில்ஓரைந்தில் கேந்திரமேற
வத்தாதசெல்வங்கொடுப்பன்-சுகம்
கருமமும்வேட்டலும் சொல்லுவாய்தோழி—சங்கர. 293

லாபத்தில்குருவுமிருக்க மாதே
லாபனுமுச்ச கேந்திரமேற
பாபமோகிஞ்சிற்றுசெய்யான்—மெத்த
பாக்கியம்போக்கியம் சொல்லடிதோழி—சங்கர. 294

வெய்யோனிருபக்கம்பாரு-மாதே
வேந்தனுக்கொவ்வான கோள்களுமேற
பையவேயிவனுக்குப் பண்டு-பொருள்
யோகமும்போகமும் பகர்ந்துசொல்தோழி—சங்கர. 295

## நாலவன் திசைக்கு - நொண்டிவண்ணம்

தனனு தனதனன—தனனு
தனன தனன தனதன தனனு (தனனு)

நாலவன் திசைகேளு-அவன் நாகரீகமுள்ள விதிப்படிசெய்ய நாலேழில் ஓர்பத்தில்-நல்ல லக்கினமேறி கேந்திரிக்க-நலமுள்ள சுகங்கொடுப்பன் நாணய-சென்னல் வயல்நிதிகளும் மாடுமக்களும்-போக்விருத்தி யோகவிருத்தி-வாகனமும்-ஆளடிமைசேர்க்கைகளும் மெத்தவுண்டு-கெடிமெத்தைவீடுமுண்டு-துலங்கிய-வியாபாரஞ் செய்வதில் லாபமுண்டு பூட்டகமாகவைத்த ஜோசியத்தை-புலிப்பாணி விபரமா யுரைத்துவிட்டேன் தனனு-தன தனனு. 296



## எட்டுக்குடையவன் திசைக்கு

### ஷ வண்ணம்

அட்டமாதிதிசைகேளு-அவன்-சப்தமத்தில் கோணங்கள் கேந்திரிக்க அவன் செய்யும் கொடுமைகளை நானும் அடவுடனே சொல்லத்தொடங்குகிறேன்-நட்டபயிர் தீச்சுடுவன்-நலமுள்ள சுகங்காட்டி மெத்தக் கெடுத்திடுவன் - ராஜசமுகங்கொண்டு போவன் அரசரால் சிறைக்காவல்பூண்டு மீண்டுவருவன்—மனையோடு மாடகூடம்-நல்ல-பொக்கிஷங்களெல்லாம்-கொள்ளையிடுவன்-மாருலடிபடுவன் - நல்ல மனையாளை வேறுபடுத்திடுவன் - மூலையிலுறங்கவைப்பவன் - முழுதும் பட்டினியேபோட்டு வருந்திடுவன்-கண்டோ பேசிடவும்-கடையினில்-கையேந்திக்கொரு காசுக் காத்திருப்பான்—பந்துஜேன மெல்லவரும் - இவனுக்கு - போக்கு வழிதேடுவரிழுத்து விட்டு-கட்டு கொட்டுவெட்டுகளும் - கனத்து-சண்டையில்தாக்கி கொன்றிடுவன் - ஒருவன் களத்திரத்தை-நல்ல-உன்னிதபோகங்கள் செய்திடுவன் சித்திரபதுமை பெற்ற நல்ல சீமாட்டி வாசலிலும் காத்திருப்பன் - இந்திரலீலை சுந்திரவைபோகம்-க்ஷணத்தினில் துன்பத்தைக் காட்டியேயின் பஞ்செய்வன்-போகர்சொன்ன விதிதொண்டியை-புலிப்பாணி-கிளிப்பிள்ளை சொல்போ லுரைத்து விட்டேன்-அட்டமாதிதிசையும் கூறு-நானும்-அணுவுக்கு அணுவாக உரைத்து விட்டேன் தனனு தனதனன. 297

## இலக்கினங்களின் வேளைக்குத்தகுந்த அமிர்தயோகம் சித்தயோகம் மரணயோகம் முதலியவை யறிய

மகரமரிகும்பம்யாழ் மாதலவன்வில்மீனம்
பகர்துலைதேள்மாடாடு பண்பாய்—அஃதுலகில்
லேசாரதாமேவில் லேசியமாம்நன்மை
தாசாரா மேவிலதந்தான்.

(இ-ள்.) மகரம், சிம்மம், கும்பம், மிதுனம் இந்த நான்கு இலக்கினங்களுக்கு சாத்மீகவேளைவந்தால் அமிர்தயோகமும், தாமத வேளைவந்தால் மரணயோகமும் இது இரண்டுமல்லாத

மற்ற ராக்ஷச வேளைவந்தால் சித்தயோகமுமாம். அப்படியே கன்னி-கடகம்-தனுசு-மீனம் இந்த நான்கு இலக்கினங்களுக்கும் ராக்ஷச வேளை வந்தால் அமிர்தயோகமும் சாத்மீகவேளையானால் மரணயோகமும் இதுகளிரண்டுமல்லாத மற்ற தாமத வேளையானால் சித்தயோகமுமாம். அப்படியே துலாம் - விருச்சிகம் - மேஷம்-ரிஷபம்-இந்த நான்கு இலக்கினங்களுக்கும் தாமத வேளையானால் அமிர்தயோகமும், ராக்ஷச வேளையானால் மரண யோகமும், இதுகளிரண்டுமல்லாத மற்ற சாத்மிகவேளையானால் சித்த யோகமுமாம். எவ்விதமான சுபகாரியங்களுக்கும் அநேகர் இலக்கினங்களுக்குத்தக்க வேலைகளைப் பொருத்தப்பார்க்காத தோஷத்தால் விக்கினங்கள் நேரிடுவதை கவனிக்க வேண்டும். 298

### இடமறிந்துரைத்தல்

கேளப்பாராசிபணி ரெண்டுக்குள்ளே
கனமுள்ளகோள்கள் நிலை யறியாமல்தான்
பாளப்பாபலவாருய் சக்கரம்பூட்டி
பணம்பறிக்கும்வித்தையது பாரிலேதான்
சூளப்பாசோதிடமும் முன்னூறுக்குள்
சுகமாகபாடிவைத்தேன் நுணுக்கமாக
நீளப்பாபோகருட கடாக்ஷத்தாலே
நீணிலத்தில்புலிப்பாணி நிகழ்த்தினேனே. 299

### இதுவுமது

காணப்பாகுருபதியின் நிலைமைபாரு
கனமுள்ளஇராசிநின்ற நிலையைப்பாரு
வீணப்பாலெக்கினேசன் நிலையைப்பாரு
விதமானஜென்மனுட திசையைப்பார்த்து
ஊணப்பாஉன்மனதை திடப்படுத்தி
உத்தமனேஊழ்வினையை யெடுத்துச்செப்பு
ஆளப்பாபோகருட கடாக்ஷத்தாலே
அப்பனேபுலிப்பாணி முன்னூறுமுற்றே. 300

புலிப்பாணி சோதிடம்-300
முற்றிற்று

---

திருமகள் அச்சகம், சென்னை-1, 1981